பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

வலம்புரி
Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை (12.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 297

# அரியாலை மாம்பழம் சந்தியில்

# பவள் வாகனம்-ஆட்டோ விபத்து

## பொது மக்கள்-படையினர் களேபரம்;வலம்புரிச் செய்தியாளர்கள் தாக்கப்பட்டனர்

(அலுவலக செய்தியாளர் குழு)

**அரியாலை மாம்பழம் சந்தியில் இராணுவ பவள் வாகனம் ஆட்டோ ஒன்றை மோதி விபத்துக்குள்ளானதை அடுத்து, அப்பகுதியில் திரண்ட பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டு, அந்நிலைமை கட்டு மீறி பெரும் களேபரமாக வெடித்தது.**

**இதனால் மாம்பழம் சந்திப்பகுதியில் பெரும் பதற்றநிலை உருவானது. துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல், குண்டாந்தடியடிப் பிரயோகம் என படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலால் பொது மக்கள் பலர் காயம்டைந்துள்ளனர்.**

**சம்பவம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற வலம்புரிப் பத்திரிகையின் செய்தியாளர்கள் மீது படையினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலால் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். செய்தியாளரின் புகைப்படக் கருவி (டிஜிற்றல் கமரா) பறிக்கப்பட்டதுடன் இரு மோட்டார் சைக்கிள்களும் படையினரால் அடித்து நொருக்கப்பட்டன.**

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவ பவள் வாகனம், அரியாலை நோக்கிச் சென்று கொண்டிருந் ஆட்டோ மீது மாம்பழம் சந்தியில் மோதி விபத்துக்குள்ளானது.

இச் சம்பவத்தில் ஆட்டோவில் பயணம் செய்த எம்.மகேஸ்வரன் (வயது40) படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆட்டோ சாரதி சிறுகாயத்துடன் தெய்வாதீனமாகத் தப்பினார்.

சம்பவத்தையடுத்து ப்டையினர் தமது வாகனத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த முயற்சித்த போது, அங்கு திரண்டிருந்த பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையே முறுகல் நிலை உருவானது.

இதன்போது பொது மக்களை விரட்டும் வகையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதுடன் வானத்தை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்து தடியடிப் பிரயோகத்திலும் ஈடுபட்டனர்.

பதிலுக்குப் பொது மக்களும் கற்களாலும், போத்தல்களாலும் (10ம் பக்கம் பார்க்க)



ஐரிஷ் நாடாளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை ஆராய்ந்து வரும் குழுவுக்கு தலைமைதாங்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கைலாகு கொடுத்து வரவேற்பதையும் அருகில் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா நிற்பதையும் படத்தில் காணலாம்.

## அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நேற்றிரவு பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவுக்கு நேற்றிரவு முதல் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

அரியாலை மாம்பழம் சந்தியில் படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையில் இடம் பெற்ற களேபரத்தில் காயமடைந்த பொலிஸார் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்தே பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

களேபரத்தில் கண்டியைச் சேர்ந்த எஸ்.கமுகுகுவல (வயது 49) என்ற பொலிஸாரே காயமடைந்தவராவார்.

இதேவேளை யாழ்.போதனா (10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவினரின் வாகனமும் தாக்குதலில் சேதம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தியில் நேற்றுமாலை இடம் பெற்ற வாகன விபத்தைத் தொடர்ந்து பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இடம்பெற்ற களேபரத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வாகனக் கண்ணாடிகள் நொருக்கப்பட்டன.

இராணுவ வாகனமும் ஆட்டோவும் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு வருகைதந்து படையினருடனும்! பொதுமக்களுடனும் கலந்துரையாடி நிலைமையைச் சுமுகமாக்க முயன்றனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## நேற்றைய தாக்குதலில் பொது மக்கள் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை மாம்பழம் சந்தியில் நேற்று மாலை பொது மக்களுக்கும் படையினருக்குமிடையில் இடம் பெற்ற களேபரத்தில் பெண்ணொருவர் உட்பட ஆறுபொது மக்கள் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரியாலையைச் சேர்ந்தவர்களான இராம்தீசன்(வயது 23), ம.பகீரதன்(வயது 27) ஆகியோர் உட்பட மேலும் நால்வர் காயமடைந்தனர்.இதேவேளை படையினர், பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்தில் பலர் சிறுசிறு காயங்க (10ம் பக்கம் பார்க்க)

## மாம்பழம் சந்தி விவகாரம்

# கண்காணிப்புக் குழுவுடன் புலிகள் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தினையடுத்து அங்கு ஏற்பட்ட களேபரம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுமாலை 7மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளால் சம்பவம் தொடர்பான கண்டன அறிக்கையொன்று கண்காணிப்புக்குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

மாம்பழம் சந்திப்பகுதியில் இராணுவ கவச வண்டி, முச்சக்கர வண்டியை மோதியமையும், கடந்த வாரங் (10ம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சர் அடுத்த வாரம் இலங்கை வருவார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கா தலைமையிலான ஒரு குழுவினர் அடுத்தவாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர். இந்திய இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் ஐந்தாவது கூட்டத்தொடரில் கலந்து கொள்ளவே இவர்கள் வரவுள்ளனர்.இரு நாடுகளுக்கிடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதே இவ்வாணைக் குழுவின் முக்கிய பணியாகும்.

எதிர்வரும் புதனன்று நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக, நிதி, முதலீடுகள், கலாசார மற்றும் விஞ்ஞான தொழில் நுட்ப விவகாரங் (10ம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்

## கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக இன்று செய்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

படையினர் மற்றும் பொலிஸாரினால் ஊடகவியலாளர்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டுவருவதைக் கண்டித்து யாழ்ப்பாணம் யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்.குடா நாட்டில் படையினராலும் பொலிஸாராலும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு வருவதுடன் அவர்களது புகைப்படக் கருவிகளும், வாகனங்களும் சேதமாக்கப்பட்டு வருகின்றன. நேற்றையதினம் அரியாலை மாம்பழம் சந்தியில் இடம் பெற்ற தாக்குதலிலும் ஊடகவியலாளர்கள் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது புகைப்படக் கருவியும் படையினரால் பறித்தெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செய்தி சேகரிக்க முடியாதவாறு (10ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் போது

# தடைசெய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகளை படையினர் பயன்படுத்தியுள்ளனர்

## கள ஆய்வுகள் மூலம் ஊர்ஜிதம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற யுத்தங்களின் போது, தடைசெய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகள் சனநெருக்கடியான பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆய்வுகளின் போது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என சர்வதேச தெற்காசிய பங்களிப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி டபிள்யூ. ஜேம்ஸ். அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டு யுத்தத்தால் அழிவடைந்துள்ள பகுதிகளைப் பார்வையிட்டதுடன், களஆய்வுகளையும் நடாத்திச் சென்ற இவர் இது விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

யாழ்ப்பாணத்திற்குச் சென்ற நாம் அங்கு இடம்பெற்ற யுத்தங்களால் சேதமடைந்துள்ள பகுதிகளை ஆராய்ந்து பார்த்ததுடன் அங்குள்ள வெற்று எறிகணைகள் மற்றும் குண்டு வீச்சுகளால் அழிவடைந்துள்ள கட்டடங்கள் ஆகியவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அங்கு தடைசெய்யப்பட்டுள்ள கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

அத்துடன், மேற்படிக் குண்டுகளை இராணுவத்தினரே பயன்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களின் விடயங்களில் தேர்ச்சி மிக்க ஒருவரையும் நான் அங்கு கூட்டிச் சென்றதால் இது பற்றி மிகத் தெளிவாகவே ஆராய்ந்து இவ் உண்மை கண்டறியப்பட்டது. இந்த மாதிரியான தடைசெய்யப்பட்ட குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருப்பது நுளம்பைக் கொல்ல கைக்குண்டைப் பயன்படுத்துவதற்கு ஒப்பான செயலாகும்.

ஆயினும் இது தொடர்பாக மேலும ஆராய்வதற்காக அங்கு கிடைக்கப்பெற்ற வெற்று எறிகணைகள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இது போன்றே, விடுதலைப் புலிகள கடந்த கால யுத்தங்களின் போது என்ன வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள் என்பது பற்றிய ஆய்வு நடாத்துவதற்கு எல்லைக் கிராமங்களின் சோதனைகளை நடாத தவுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(உ-18)

### மூத்த உறுப்பினர் கௌரவிப்பு

(வடலியடைப்பு)

வலி. வடக்கு ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தின் மூத்த உறுப்பினர் கௌரவிப்பு விழா இன்று மு.ப.9 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எம்.கே.தவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதமவிருந்தினராக. யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சம்மேளனத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களான செ.துரைரத்தினம்,சி.துரைராசா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(உ.21)

### பொலிஸ் இடமாற்றங்களில் அரசியல்வாதிகள் தலையீடு

## ஆணைக்குழுவின் தலைவர் நிராகரிப்பு

(கொழும்பு)

பொலிஸ் இடமாற்றங்கள் அரசியல்வாதிகளின் பரிந்துரையின் பேரிலேயே இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டை பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் றஞ்சித் அபயசூரிய நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத தெரிவிக்கையில், கடந்த ஜூன் மாதத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சகல இடமாற்றங்களும் ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் விசேட குழுவின் சிபார்சுகளுக்கு அமையவே இடம்பெற்றுள்ளன என்பதுடன் பொலிஸ் ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவும் இடமாற்றங்கள் செய்யப்பட்டன.

தற்போது பதவி உயர்வுகள் தொடர்பாகவே கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-60)

யாழ்ப்பாணச் சிறார்களுக்கு

## ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்தேற்றல்

(சுதுமலை)

அனுராதபுரம்,யாழ்ப்பாணம் ஆகிய இரு மாவட்டங்களிலும் இம்மாதம் முதல் சிறுவர்களிற்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இது தொடர்பான அறிக்கை சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இது பற்றி தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

* ஒருவயது பூர்த்தி அடையாத சிறுவர்களுக்கு முதலாவது ஊசி ஏற்றப்பட்டு 4 வாரத்தின் பின்னர் மற்றைய ஊசி ஏற்றப்படவேண்டும்.

இரண்டு வயது பூர்த்தியடைந்த சிறுவர்களுக்கு ஒரு ஊசி மட்டும் ஏற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பான மேலதிக விவரங்களை அந்தந்தப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மூலம் அறிந்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-252)

### பாராட்டு விழா

சமூகசேவையாளரும் சமாதான நீதிவானுமான கி.தங்கவடிவேல் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சன சமூகநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி வை.தியாகராஜாவும் சிறப்புவிருந்தினராக கோப்பாய் தெற்கு கிராம உத்தியோகஸ்தர் எஸ்.தயாபரனும் கலந்துகொள்வர்.

(இ)

### தொகை மதிப்பீடு

கைத்தொழில் வர்த்தகமும் சேவைகளுக்குமான தொகை மதிப்பீடு யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்படி மதிப்பீட்டை தொகை மதிப்பீட்டு புள்ளி விபரத் திணைக்களம் இவ்வாண்டு மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் நிறுவனங்களை முன்னிலைப்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புக்கள் அடுத்த வாரம் முதல் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு நடத்தப் படவுள்ளனர்.

(உ-70)

## முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு இலவச சீருடைத்துணி விநியோகம்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் ஆண்டு தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைப்பணிகளில் ஓர் அங்கமாக முன்பள்ளிப் பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இலவச சீருடைத் துணிகள் வழங்கபபடவுள்ளன.

இச்சங்கத்தின் அங்கத்துவக் கிளைகளான சுன்னாகம், தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், கோண்டாவில் மற்றும் சங்கானை ஆகிய 6 பிரிவுகளையும் உள்ளடக்கிய 68 முன்பள்ளிகளின் 2ஆயிரத்து 30மாணவர்களுக்கும் 103முன்பள்ளி ஆசிரியர்களுக்குமே இலவச சீருடைத் துணிகள் வழங்கப்படவுள்ளன.

முன்பள்ளிச் சிறார்களுக்கு நீலம் மற்றும் வெள்ளை நிற பாடசாலைத் துணியும், ஆசிரியர்களுக்கு மெல்லிய நீல நிறச் சேலையும் வழங்கப்படவுளளது.

இச் சீருடைத்துணி வழங்கலுக்கு கொத்தணி அங்கத்தவர்களின் வருமான நிதியில் இருந்து 5இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.மெய்யழகன் தெரிவித்துள்ளார்.

(உ-103)


உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

* இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இந்தியா முயற்சி.
* அயர்லாந்தில் இறுதித் தீர்வு.
* யாழ்.குடாவில் தொடரும் விபத்துக்கலவரம்.
* வியாசரின் பதில்கள்.
* பொன்.கணேசமூர்த்தியின்

கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(13-19 ஒக். 2003) Sankunatham

விலை ரூபா 14.00

# ஆஸி.அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் "மத்தியூ ஹேடன்" புதிய டெஸ்ட் சாதனை

## பிறைன் லாரா பின்தள்ளப்பட்டார்

அவுஸ்திரேலியக் கிரிக்கெற் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹேடன் உலக டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் புதிய சாதனை ஒன்றை நிலை நாட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய மற்றும் சிம்பாவே அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலியாவின் பேர்த் விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகின்றது.

இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்காக ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய மத்தியூ ஹேடன் டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் ஓர் இன்னிங்ஸ் தனிநபர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டவர் என்ற சாதனையை நிலை நாட்டியிருக்கின்றார்.

இவர் இந்தப் போட்டியில் 380 ஓட்டங்களைப் பெற்று புதிய டெஸ்ட சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

1994ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது மேற்கிந்திய தீவுகளின் வீரர் பிறைன் லாரா ஓர் இன்னிங்ஸில் நிலை நாட்டியிருந்த அதி கூடிய ஓட்ட எண்ணிக்கையான 375 ஓட்டங்கள் என்ற சாதனையையே மத்தியூ ஹேடன் முறியடித்துள்ளார்.

இந்த 380 ஓட்டங்களை பெறுவதற்காக இரண்டு நாட்களாக களத்தில் 622 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடிய ஹேடன் 437 பந்து வீச்சுக்களுக்கு முகங்கொடுத்து 38 பவுண்டரிகளும, 11சிக்ஸர்களும் அடங்கலாக பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா சார்பாக அடெம் கில்கிறிஸ்ற் ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களையும், ஸ்ரிவ்வோ 78 ஓட்டங்களையும், டேமியன் மாட்டின் 53 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்று கொடுத்தனர்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெற்றுக்களை இழந்து 735 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.


பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் சிம்பாவே அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவின்போது ஒரு விக்கெற்றை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சிம்பாவே அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைக்கப்பெற்று சில ஆணடுகள் ஆகியருப்பினும், அவுஸ திரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டி இதுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.இந்த முதலாவது போட்டியிலேயே மத்தியூ ஹேடன் சிமபாவே அணிக்கெதிராக இச் சாதனையை நிலை நாட்டியிருக்கின்றமை இங்கு நோக்கத்தக்கது.

இதேவேளை 31வயதுடைய மத்தியூ ஹேடன் இது வரை 15 டெஸ்ட் சதங்களையும், 45 டெஸ்ட் அரைச் சதங்களையும் குவித்துள்ளார். இவர் டெஸ்ட் போட்டி இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற அதி கூடிய ஓட்டமாக இதுவரை இந்திய அணிக்கெதிராக 2001 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட 203 ஓட்டங்களே முன்னைய சாதனையாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-68)

# அக்ரமின் சாதனைக்கு வேட்டு - இதுவே அனில் கும்ளேயின் அடுத்த இலக்கு

உலக டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் 350விக்கெட்டுக்களை வீழ்த்தியோர் வரிசையில் இந்திய



அணியில் சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ளே 14வது வீரராக இடம் பிடித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிராக அஹமதா பாத்தில் இடம்பெற்று வருகின்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஜேக்கப் ஓரமின் கிரிக்கெற்றை கைபபற்றியதன் மூலம் அனில் கும்ளேயின் இந்த மைல்களை எட்டிப்பிடித்துள்ளார்.

31 வயதான அனில் கும்ளே தான் விளையாடும் 77வது டெஸ்ட் போட்டியிலேயே இந்த 350வது விக்கெற்றைக் கைப்பற்றியுள்ளார்.

இதேவேளை, 241 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ள அனில் கும்ளே இதுவரை 308 விக்கெற்றுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

இதுவரை உலகக் கிரிக்கெற் அரங்கில் 400இற்கும் மேற்பட்ட விக்கெற்றுக்களை டெஸ்ட் போட்டிகளிலும், ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் வீழ்த்தியுள்ள ஒரே ஒரு வீரராக பாகிஸ்தானின் வசீம் அக்ரம் மட்டுமே திகழ்கின்றார். இதே போல இரண்டு வகைப் போட்டிகளிலும் 400இற்கும் அதிகமான விக்கெற்றுக்களைக் கைப்பற்றுவதே தனது நோக்கமென அனில் கும்ளே தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# கௌரவ நாயகனாக களமிறங்கும் அக்ரம்

தென்னாபிரிக்க அணிக்கெதிராக இனறு இடம்பெறவுள்ள ஐந்தாவதும இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி சார்பாக வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் விளையாடவுள்ளார்.

ஏற்கனவே சர்வதேசக் கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ள வசீம் அக்ரமை சொந்த நாட்டில் கௌரவமளிக்கும் வகையிலும் பிரியாவிடை வழங்கும் முகமாகவும இந்தப் போட்டியில் விளையாடுமாறு கேட்டுக்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் வேண்டுகோளிற்கு அமையவே வசீம் அக்ரம் இந்தப் போட்டியில் விளையாடவுள்ளார்.

எனினும் சர்வதேசக் கிரிக்கெற் போட்டிகளிலிருந்து பிரியா விடை பெறுவதற்கு முன்னர் இந்திய அணியுடனான சர்வதேச ஒருநாள் போட்டி ஒன்றில் விளையாடுவதற்கு வசீம் அக்ரம் விருப்பம் தெரிவித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சொந்த நாட்டில் இடம்பெறும் இந்தப் பிரியாவிடை நிகழ்விற்கான போடடியில் தான் விளையாட அழைக்கப்பட்டதை தனக்குக் கிடைத்த பெரும் கௌரவமாகக் கருதி,போட்டியில் கலந்து கொள்ளப் போவதாக வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். (உ-68)

# தென்னாபிரிக்க அணியிடம் தோற்றுப்போனது பாகிஸ்தான்

பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையில் ராவல் பிண்புயில் நேற்று முன் தினம் நடைபெற்ற நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் தென்னாபிரிக்க அணி பாகிஸ்தானை 6 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டுள்ளது.

இதன் மூலம் 5 ஒருநாள் சர்வதேச போட்டிகள் கொண்ட தொடர் 2:2 என்ற புள்ளிகள் கணக்கில் சமப்படுத்தப்பட்டுள்ளது. இன்று இடம் பெறவுளள ஐந்தாவதும் இறுதியுமான போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என கிரிக்கெற் ரசிகர்கள் பெரும் ஆவல் வெளியிட்டுள்ளனர்.

இவ் நான்காவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.4 ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இப்போட்டியில் பாகிஸ்தான் அணி சார்பாக பதில் தலைவராக செயறபட்ட யூசுப் ஜொஹானா மட்டுமே சிறப்பாக துடுப்பெடுத்தாடி 60 ஓட்டங்களை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக அன்ரூநில் 39 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெற்றுக்களையும், மக்கையா நிற்னி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 38.5 ஓவர் முடிவில் 4 வக்கெற்றுக்களை மட்டும இழந்து வெற்றி இலக்கான 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இதில் தென்னாபிரிக்க அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஜக்கலீஸ 58 ஓட்டங்களையும் கேர்சல் கிப்ஸ் 41 ஓட்டங்களையும் தமது அணிககாகப் பெற்றுக் கொடுத்தனர். (உ-68)

# அதிபார குத்துச்சண்டை சம்பியனானார் சில்வியோ


இத்தாலிய நாட்டைச் சேர்ந்த சில்வியோ பிராங்கோ உலக வைட் அதிபாரக் குத்துச்சண்டை போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்துள்ளார்.

பிரான்சின் பாரிஸ் நகரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நடப்புச் சம்பியனான மெக்டீஸ் ஸகுடோன் உடனான போட்டியிலேயே இவர் இந்தப்பட்டத்தை வென்றெடுத்துள்ளார்.

இந்த குத்துச்சண்டைப் போட்டியின் 11வது கேதாவில் பிராங்கோ இவரை வெற்றிகொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் பிராங்கோவிற்கும், ஸகுடோனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியபோதும் கேதாவின் 11வது சுற்றில் ஸகுடோனை மிக உக்கிரமாக சில்வயோ ப்ராங்கோ தாக்கி வீழ்த்தினார்.

இதன் காரணமாக இந்த 11வது சுற்றுடன் போட்டியை நிறைவிற்கு கொண்டு வந்த மத்தியஸ்தர், சில்வியோ பிராங்கோவின் வெற்றியை உறுதி செய்த போது அரங்கில் பிராஙகோவின் ரசிகர்கள் பெரும் மகிழச்சியில் திளைத்திருந்தனர். (உ-68)



அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்ற 21 வயதின் கீழ்பிரிவு மாணவருக்கான தேசிய மட்ட குண்டெறிதல் போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலய மாணவன் த.பாகீஸ்வரன் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

# கிரிக்கெற் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த, ஆறு வீரர்கள் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட கிறிக்கெற் சுற்றுப் போட்டி இன்று பி.ப. 3.30 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கே.சீ.சீ.சீ.ஏ. எதிர். கே.சீ.சீ.சீ.பீ விளையாட்டு அணிகளும் இறுதிப் போட்டியில் சென்றலைற் சொக்ஸ் வி.க. எதிர் ஜங்ஸ்ரார் வி.கவும் மோதவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யூனியன் கல்லூரி அதிபர் எஸ.புண்ணியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

# பரிசளிப்பு விழா

(வட்டுக்கோட்டை)

மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட ஆங்கில தின எழுத்தாக்கற்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை திருகோணமலை புனித ஜோன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-89)

# ஜே.டி.சி.எ கேடயத்திற்கான இறுதிச் சுற்றுப்போட்டி இன்று

ஜே.டி.சி.எ. வெற்றிக் கேடயத்திற்கான யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிரிக்கெற் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் ஜொலிஸ்ரார் வி.க. அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் வி.க. அணி மோதவுள்ளன.

இவ்விரு அணிகளும் ஒரு போட்டியில் தோல்வியடைந்தும், மறு போட்டிகளில் நிதானமாகவும், திறமையாகவும் விளையாடி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜொலிஸ்ரார் வி.க. அணி வீரர்களின் விபரம் வருமாறு:-

எஸ்.லக்சுமிகாந்த், என்.சிவராஜா, எஸ.நாதன், எஸ்.மகேந்திரராஜா, எஸ். சைலேஸ்வரன், எஸ்.கௌசீகன், ஆர்.கிருஷ்ணராஜா, வி.மணிவண்ணன், எஸ்.கோபிநாத், எஸ்.அருண்குமரன், கே.ராஜாதித்தன், எஸ்.தேவக்குமார், பீ.ஜெயரூபன், ஆர்.கபிலன், ஆர்.வரதன்.

ஜொனியன்ஸ் வி.க. அணி வீரர்கள் விபரம் வருமாறு:-

வி.குமணன்(தலைவர்), வி.விஸ்ணுவர்த்தனன் (உபதலைவர்), சி.எம்.டினேஸ், பி.கஜரூபன், ரி.சி.அன்றூ, எ.கரேஸ், எம்.மயூரன். சி.எஸ்.வில்சன், எஸ்.ரஜீபன், ரி.கிருஷாந்த், பி.சஜின்தன், பி.லவேந்திரா, ச.அகிலன், எ.தனஞ்சயன். (உ)

# நியூசிலாந்து அணி வீழ்ச்சி இந்திய அணி வீரர்கள் எழுச்சி

நியூசிலாந்து அணிக்கெதிராக இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அஹமதா பாத்தில் நடைபெற்று வரும முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது நியூசிலாந்து அணி 8விக்கெற் இழப்பிற்கு 282 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நியூசிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் நெதன் அஸ்ரல் 103 ஓட்டங்களையும், கிறைக்மக்மிலன் 54 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

முன்னதாக இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெற்றை இழந்து 500 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டிருந்த வேளை, ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ராகுல் ட்ராவிட் 222 ஓட்டங்களையும், சௌரவ் கங்குல 100 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்திருந்தனர்.

இதன்படி நியூசிலாந்து அணி தொடர்ந்தும் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுவதைத் தவிர்ப்பதற்கு இன்னும் 19 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது. இதற்காக 2விக்கெற்றுக்களை மீதமாக வைத்துள்ளது. இந்திய அணி 19 ஓட்டங்களுக்குள் இந்த இரு விக்கெற்றையும் கைப்பற்றி நியூசிலாந்தைத் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடச் செய்ய முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-68)

# 'றகர்' கோப்பையைக் கைப்பற்ற ஆஸி. அணி பெரும் முயற்சி

நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமான உலகக் கிண்ண றகர் போட்டிகளின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியா ஆஜன்டீனாவை எதிர்கொண்டது.

இப்போட்டியில் 24:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆஜன்டீனாவை வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி, இவ்வருடத்திற்கான வெப் பெலிஸ் உலகக் கிண்ண றகர் கோப்பையை வெற்றி பெறுவதற்கான தனது முயற்சியை ஆரம்பித்திருப்பதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஒவ்வொரு குழுவிலும் 4 நாடுகள் வீதம் 4 குழுக்களில் மொத்தமாக 16 நாடுகள் இவ் வருட உலகக் கிண்ண றகர் போட்டிகளில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

# ஈராக்கில் உள்ள அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறுமாறு முஸ்லிம் நாடுகள் தீர்மானம்

(புத்திரஜாயா)

ஈராக்கிலிருந்து அமெரிக்கர்களை வெளியேறுமாறு முஸ்லிம் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

57 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய சம்மேளனத்தின் மாநாடு மலேசியாவின் நிர்வாகத் தலைநகரான புத்திரஜாயாவில் நேற்று ஆரம்பமானபோது இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், ஈராக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கும் ஐக்கிய நாடுகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் எனவும் முஸ்லிம் நாடுகள் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், ஈராக்கில் அமெரிக்கப் பிரஜைகள் நிலைகொண்டுள்ளமை, பலஸதீனப் பிரச்சினை என்பன அவசரமாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டும என இஸ்லாமிய மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இஸ்லாமிய சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் ஆப்டெல் ஹுவா செற்பெல்க்ஸ் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்கா மீது அல்கெய்டா இயக்கம் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் நடைபெறும் மிகப்பெரிய இஸ்லாமிய நாடுகளின் மாநாடு இதுவாகும்.

எதிர்வரும் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் கடைசி இரண்டு தினங்களில் முஸ்லிம் நாடுகளின் தலைவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

இதில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமும் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக்கில் பேரழிவுகளை ஏற்படுத்தும் அணுவாயுதங்கள் இருப்பதாகக் கூறி அந்நாட்டின் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் கடந்த பெப்ரவரிமாதம் தாக்குதல் நடத்தின.

அது மட்டுமன்றி அந்நாட்டு அதிபர் சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து கவிழ்த்து புதிய ஈராக்கை உருவாக்குவதாகக் கூறி அங்கு பெருமளவு அமெரிக்கப் படைகள் நிலைகொண்டுள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குப் பல நாடுகளும் தமது எதிர்ப்பினை வெளியிட்டு வந்தபோதும், தற்போது மலேசியாவில் ஆரம்பமாகியுள்ள இஸ்லாமிய சம்மேளன மாநாட்டில் இந்த விடயம் கடுமையான முறையில் விவாதிக்கப்பட்டு அமொிக்கர்களை ஈராக்கில் இருந்து வெளியேற்றக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-2)

# இந்திய விமானப்படைக்கு கண்காணிப்பு விமானங்கள்

## பாகிஸ்தான் பலத்த கண்டனம்

(மொஸ்கோ)

நடைபெறவுள்ள தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கும் கண்காணிப்பு விமானங்களை இந்திய விமானப்படைக்காக உருவாக்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இஸ்ரேல், இந்தியா, சீனா ஆகிய நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

ரஷ்யாவினால் உருவாக்கப்பட்ட போக்குவரத்து விமானங்களில் இஸ்ரேலினுடைய கண்காணிப்பு ராடர் கருவியைப் பொருத்தவுள்ளதாக இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதன் பெறுமதி 100 கோடி டொலர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இவ் ஒப்பந்தம் எங்கு, எப்போது கைச்சாத்திடப்பட்டது என்பது குறித்த விபரங்களை அந் நாடுகள் வெளியிடவில்லை.

இம் மூன்று நாடுகளினாலும் கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஒப்பந்தத்திற்கு பாகிஸ்தான் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்தியா ஆயுதங்களை வாங்கிக் குவிப்பது தெற்காசியப் பிராந்தியத்திற்கு அபாயத்தை அதிகரித்துள்ளது என பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐந்து ஆண்டுகளுககு முன்னர் இஸ்ரேலும், சீனாவும் இதேபோன்றதொரு ஒப்பந்தத்தில் கைச்சாததிட்டிருந்ததும், இவ்வாறான உயர் தொழில்நுட்பம் கொண்ட ஒப்பந்தத்தை விரும்பாத அமெரிக்கா அதற்குக் கடும் எதிர்ப்பினை வெளியிட்டதை அடுத்து ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

## ஸ்பெயின் நாட்டு அதிகாரிகள் சிறைக் கைதிகள் மீது சித்திரவதை

ஸ்பெயின் நாட்டுச் சிறை அதிகாரிகள் சித்திரவதை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது அந்நாட்டின் சிறைக் கைதிகள் அளித்துள்ள வாக்குமூலங்களில் இருந்து தெரியவந்துள்ளது என ஐக்கிய நாடுகளின் தூதுவர் திஜோ பென்போவென் கூறியுள்ளார்.


எனினும், இது உண்மையா என்பதைக் கண்டறிய பல மாதங்கள் செல்லும் என அவர் கூறியுள்ளார்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் சார்பில் ஸ்பெயினுக்குச் சென்றுள்ள திஜோ பென்போவென் அங்குள்ள நிலைமைகள் குறித்து செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் 35 வருடகாலப் பிரிவினைவாதப் போராட்டம் குறித்து அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவுள்ளதாகவும், சில மாதங்களில் அதனை வெளியிட முடியும் எனவும் மேலும் இவர் தெரிவித்துள்ளார். (உ-2)



இவ் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு ஈரானைச் சேர்ந்த இஸ்லாமியப் பெண் வழக்கறிஞர் ஷிரீன் இபாடிக்குக் கிடைத்துள்ளது. இவர் 2001 ஆம் ஆண்டு நோர்வே நாட்டில் விருது ஒன்றினைப் பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. இடது புறத்தில் ஷிரீன் 102 வருடகாலத்தில் நோபல் பரிசை வென்ற முதல் இஸ்லாமியப் பெண் என்ற பெருமையும் இவருக்கே.



ஷென் ஹு என்ற விண்கலததைச் சுமந்து செல்லத தயார் நிலையில் உள்ளது சீனராக்கெட். இந்த ராக்கெட்டில் செல்லும் விண்கலததில் ஒரு வீரரை அனுப்ப சீனா திட்டமிட்டுள்ளது. இந்த ராக்கெட்டை வரும் 15–17ம் திகதிககிடையில் அனுப்ப உள்ளது. இந்த முயற்சி வெற்றி பெற்றால் வீரருடன் விண்கலம் அனுப்பும் 3–வது நாடாக சீனா இருக்கும். அமெரிக்கா, ரஷ்யா ஏற்கனவே இதததைய விண்கலங்களை அனுப்பி

### செப்ரெம்பர் தாக்குதலை அடுத்து இடம்பெற்ற கலவரத்தில்

# இந்தியரைச் சுட்டுக்கொன்ற அமெரிக்கருக்கு மரணதண்டனை

(நியூயோர்க்)

உலக வர்த்தக மையக் கட்டடம் மீதான பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்காவில் இடம்பெற்ற கலவரத்தின் போது சீக்கியர் ஒருவரைச் சுட்டுக்கொன்ற அமெரிக்கருக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கத் தலைநகர் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடம் தகர்க்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து செப்ரெம்பர் 15ஆம் திகதி அரிசோனா மாகாணத்தின் மீஸா என்றஇடத்தில் இடம்பெற்ற கலவரத்தில் இந்தியாவில் இருந்து சென்று அமெரிக்காவில் குடியேறிய பர்பீர் சிங் சோதி என்ற சீக்கியரை பிராங்க் சில்வா ரோகு என்ற அமெரிக்கர் சுட்டுக்கொன்றிருந்தார்.

இந்தியப் பிரதமர் அட்டல் பிஹாரி வாஜ்பாய் இது விடயம் குறித்து குற்றவாளி மீது வழக்குத் தொடர்ந்து நடவடிககை எடுக்குமாறு அமெரிக்க அதிபரைக் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே மேற்படி தீப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குற்றவாளி செப்ரெம்பர் தாக்குதலினால் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என அவரது வழக்கறிஞர் கூறியுள்ளதை அடுத்து தொடர்ந்தும் குற்றவாளியின் நடவடிக்கைகளைத் தீவிர விசாரணை செய்த அரிசோனா மாநில உயர் நீதிமன்றம், குற்றவாளி ரோகு இன வெறி காரணமாகவே இவ்வாறு நடந்து கொண்டுள்ளார் எனக் கூறி நேற்று முன்தினம் இவரது மரண தண்டனையை உறுதிசெய்துள்ளது.

இதேவேளை, இத்தீர்ப்பானது அமெரிக்க நீதியமைப்பு எந்த அளவிற்கு சட்டத்திற்குக் கட்டுப்பட்டது என்பதைப் புலப்படுத்தியுள்ளது எனக் கொலை செய்யப்பட்டவரின் சகோதரர்கள் தெரிவித்துள்ளனர். (உ-2)

உலக தரிசனம்

## தொடருந்து விபத்து

(புதுடில்லி)

நெல்லையில் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் ஒருவர் பலியானதுடன் 50பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

தொடருந்து பாதையைக் கடக்க முற்பட்ட உழவு இயந்திரத்தில் கேரளா மாநிலத்தில் இருந்து மதுரைக்குச் சென்ற இந்த அதிவேக தொடருந்து மோதி 3 பெட்டிகள் தடம்புரண்டன இதனால், தொடருந்தின் உதவி ஓட்டுநர் கொல்லப்பட்டதுடன் ஓட்டுநர் காயங்களுடன் உயிர்பிழைத்துள்ளார். (உ-9)

## பயிற்சிப் பட்டறை

(வடலியடைப்பு)

யாழ். பல்கலைக் கழக முதலாம் வருட மாணவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் யெளவனப் பராய இனப்பெருக்கச் சுகாதாரக் கல்வி தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (உ-21)

## விதவைக் குடும்பங்களுக்கு உதவி

(தொல்புரம்)

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் மற்றும் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட விதவைக் குடும்பங்களுக்கு மூவி மெண்டோ நிறுவனம் எக்கோ II திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சிக்குரிய உதவிகளை வழங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குத் தலா 10 கோழிகளும், கூடு, கோழித்தீன் ஆகியனவும் வழங்கப்படவுள்ளதுடன், கோழிவளர்ப்புத் தொடர்பாக அவர்களுக்குப் பயிற்சிகளையும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

## வலி. மேற்கு மேம்பாட்டுக்கு நிதி

(தொல்புரம்)

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் புனரமைப்புப் பணிகளுக்காக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி இப்பகுதியில் வசிக்கும் தெரிவுசெய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு கிணறுகள் அமைத்தல் மற்றும் விவசாய உபகரணக் கொள்வனவு, கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட மேலும் பல மேம்பாட்டுத் திட்டங்களுக்காக தலா 10ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (உ-70)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு 2004ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்ளோமா, தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-5)

## வேலையற்றவர்கள் பதிவுசெய்யலாம்

(நவாலி)

இலங்கைத் தொழில் திணைக்களத்தின் கிளை அலுவலகம் ஒன்று யாழ்பபாணம் நாவலர் வீதியில் நாவலர் மகாவித்தியாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள கட்டடத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் க.பொ.த உயர்தரம் படித்த இளைஞர்-யுவதிகள் தொழில் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-102)

## வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

(பன்னாலை)

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் தூர்ந்து போன நிலையில் உள்ள பண்ணாலை வெள்ளவாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

மாரி காலத்தை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில், சமுர்த்தித் திட்டத்தின் கீழ் பன்னாலை கிராம அலுவலர் ஊடாக இவ்வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-32)

# பிறந்த நாளின் பலன்களை அறிந்து உங்கள் வாழ்வை இன்பமாக்குங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## பிறந்தநாள் பலன்

**யூலை 21 ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான பலன்கள்.**

## சோதிடபலன்

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டுச் சிறந்தவர்களாக வாழவேண்டும் என்று விரும்புவார்கள். இவர்கள் உயர்ந்த மனிதர்களுடன் மட்டும் தொடர்புகொள்ள விரும்புவார்கள். இவர்களுடன தொடர்புகொண்ட எவராவது குற்றங்கள் புரிந்துவிட்டாலும் அவற்றைப் பொறுத்துக்கொள்ளும் தன்மையை உடையவர்களாகவே இருப்பார்கள்.

மனிதாபிமானம் படைத்தவர்கள், நல்லிதயம் கொண்டவர்கள் என்று பலரும் சொல்லும்படி இவர்கள் மற்றவர்களிடம் இரக்கம் காட்டி, பொதுவாகக் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு உயர்ந்து விளங்குவார்கள்.

நூற்றுக்கணக்கான எதிரிகள் தோன்றினாலும், ஒரு நண்பனைக் கடைசி வரையில் காப்பாற்றும் மன உறுதி படைத்தவர்கள் இவர்கள். ஏமாற்றிவிட்டாலோ, கடமைதவறி விட்டாலோ இவர்களால் அதைப் பொறுத்துக்கொள்ளவே முடியாது. அப்போது இவர்கள் இதயமே வெடித்து விடுவதைப்போல் குமுறுவார்கள்.

### அதிக வலிமை படைத்தவர்கள்

இவர்களைப் பொறுத்தவரையில் வன்மையானவர்களாகவும், நாணயமானவர்களாகவும் இருப்பார்கள். ஆனால், பொதுவாக இவர்கள் மற்றவர்களிடம் ஏமாந்து, வாழ்க்கையில் கசப்பை அடைந்து, மற்றவர்களைக் குறை கூறிச் சீறி விழுவார்கள்.

பண விஷயங்களில் இவர்கள் மிகுந்த வாய்ப்புற்றவர்களாகவே இருப்பார்கள். எண்ணாத இடங்களில் இருந்து இவர்களுக்கு எதிர்பாராமல் பணம் வந்து சேரும். ஆனால், இவர்களுடைய ஆசை எல்லாம் அன்பில் தான்!

மற்றவர்களைத் தூண்டிவிடும் குணம் இவர்களுக்கு உண்டு. நெப்போலியன் இந்த மாதத்தில் பிறந்தவன். நெப்போலிய கார்லோலங், துணிந்த செயல்களில் இவர்கள் இறங்குவார்கள். இவர்கள் மிகவும் பெருமை கொண்டவர்களாக இருப்பார்கள். இதனால் இவர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் வருவது உண்டு!

### பரந்த நோக்கம் உடையவர்கள்

இவர்கள் பெரிய மனதுள்ளவர்களாகவும், பரந்த நோக்கம் உடையவர்களாகவும் இருப்பார்கள். மற்றவர்கள் இவர்களைக் கட்டுப்படுத்துவதோ, மற்றவர்கள் இவர்களை அதிகாரம் செய்வதோ இவர்களுக்குப் பிடிக்காது. இவர்கள் கருத்தில் நல்ல வலிமையுண்டு. ஏதாவது ஒரு திட்டத்தில் முழுக்கருத்துடன் இறங்கிவிட்டால் எப்படிப்பட்ட தடைகள் வந்தாலும், எதிர்த்துப் போராடி தாம் எண்ணியதைச் சாதிப்பார்கள்.

இவர்கள் எப்போதும் ஏதாவது ஒரு செயலில் நேரத்தைக் கழிக்க வேண்டும். சுற்றுப்புறத்தால் பாதிக்கப்பட்டு வாழ்க்கைப் போரில் இருந்து இவர்கள் விலகி நின்றால், மன நோய்க்கு இவர்கள் ஆளாகி விடுவார்கள்.

பொதுவாக இவர்கள் மிக அமைதியுடன் இருப்பார்கள். எந்தவிதமான துன்பங்களையும் பொறுத்துக் கொள்வார்கள். ஆனால், ஒரு தடவை எழுச்சி பெற்றுவிட்டால் சிங்கத்தைப் போல் எதிர்த்து நின்று எதையும் எதிர்த்துப் போரிடுவார்கள். அப்போது இவர்களுக்கு அச்ச உணர்வோ, தோல்வி ஏறபடுமோ என்ற எண்ணமோ எழாது!

மனதைத் திறந்து தாம் எண்ணுவதைப் பளிச்சென்று பேசுவதால் எதிரிகள் இவர்களுக்கு மிகுதியாகத் தோன்றுவார்கள். மறைமுகமாகச் சதி செய்பவர்களையோ, எதிர்ப்பவர்களையோ இவர்களுக்கு அறவே பிடிக்காது.

மாபெரும் வீரர்களாகவோ, பண வசதியுள்ளவர்களாகவோ இவர்கள் விளங்குவார்கள்.

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் ஒதுக்கப்பட்டு தனிமையில் வாழ்வார்கள். ஏதாவது ஒரு வேலையில் இவர்கள் ஈடுபடாவிட்டால், தனிமையும் சோகமும் உள்ளவர்களாக மாறிவிடுவார்கள்.

### உடல்நிலை

அடிக்கடி இவர்களுக்கு மயக்கம் வரும். இருதய நோய்கள் ஏற்படலாம். தலையிலும், காதுகளிலும் வலி ஏற்படும். கால்களில் அடிக்கடி காயங்கள் ஏற்படும். கால்கள் அடிக்கடி விறைத்துப் போகும்.

இவர்களுக்குப் பிடித்த நிறங்கள் ஆவன: மஞ்சள்நிறம், ஒரேஞ், பழுப்பான பச்சை, வெள்ளை முதலியவைகள் இவர்களுக்கு ஏற்றவை. (தொடரும்)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 2004ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களின் மூலம் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னரும், பரீட்சை ஆணையாளர், த.பெ.இல. 1503 கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத்தபால மூலம் அனுப்பிவைக்க வேண்டும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ எ.எம்.விஜயசிறி கேட்டுள்ளார். (உ-5)

# மன்னாரில் புதனன்று பொங்குதமிழ் பொது அமைப்புக்கள் துரித ஏற்பாடு

(மன்னார்)

''நாங்கள் எமது வீடுகளுக்குப் போவதற்காகப் படையினர் தங்கள் வீடுகளுக்குப் போகட்டும்'' என்ற தொனிப்பொருளில் மன்னாரில் நடைபெறவுருக்கும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்விற்கான துரித நடவடிக்கைகளில் பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பொது மக்கள் அமைப்புகளின் ஒன்றியமும், மன்னாரைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து இந்த விழாவினைச் சிறப்பாகச் செய்து முடிக்க ஆவன செய்து வருகின்றனர்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இன்னமும் இயல்பு நிலை ஏற்படவில்லை. இதறகுக் காரணம் பாதுகாப்புப் படையினர் மக்களின் நிலங்களையும், குடிமனைகளையும் ஆக்கிரமித்துக் கொண்டு வெளியேற மறுத்து வருவதுதான். இந்த இடங்களில் இருந்து கொண்டு தமிழ் மக்களைப் பாதுகாப்பதே தமது நோக்கம் என்று படையினர் உலகத்தை ஏமாற்றுகிறார்கள்.

எனவேதான், இந்த நிலைமைகளினால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களின் உணர்வுகளைச் சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும், சிங்கள சகோதரர்களுக்கும் ஒரே குரலில் வெளிப்படுத்துவதற்காக இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெற இருக்கிறது என்று ஏற்பாட்டாளர்கள் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

மனனாரில் பொங்குதமிழ் நிகழ்வு வரும் 15 ஆம் திகதி மன்னார் விளையாட்டரங்கில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (பி)

# அடுத்த ஆண்டு உத்தேச செலவு ரூபா. 35 ஆயிரத்து 273 கோடியாகும்

## நிதியமைச்சர் கணிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அடுத்தவருட செலவுக்கான நகல் பிரேரணையில் அரச செலவினம் 35 ஆயிரத்து 273 கோடி ரூபாவாக இருக்கும் என நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

கடன் வசதிகள் ஏனைய வழிமுறைகள் மூலம் 31 ஆயிரத்து 248 கோடி ரூபாய்க்கு மேல் அதிகரிக்கக் கூடாது என்றும், பாதுகாப்பு அமைச்சிற்கு அடுத்தவருட செலவினம் 52 ஆயிரம் கோடி ரூபா என்றும், நிதி அமைச்சின் உத்தேச செலவினம் 35 ஆயிரத்து 94 கோடி ரூபாவாகவும் இருக்கும் எனவும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# சைவத்திருமுறை விழாவன்று திருமுறை ஏடுகள் ஊர்வலம்

(தொல்புரம்)

சங்கானைக் கல்விக் கோட்டம் நடத்தும் சைவத் திருமுறை விழா எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு மூளாய் சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்து திருமுறை ஏடுகள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தைச் சென்றடையவுள்ளது.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் சைவப் பெரியார்கள் பலர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

அத்துடன், கோட்டம்ட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட பண்ணிசை, மனனம், தொண்டுபடும் செயனமுறைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (உ-70)

## மருதனார்மட சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரம்

(மருதனார்மடம்)

இணுவில் லயன்ஸ் கழகத்தினரால் மருதனார்மடம் சந்தியில் 60 அடி உயரமான மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு தற்போது வர்ணப்பூச்சு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

மருதனார்மடம் பகுதி மக்களும் சந்தை வியாபாரிகளும் இதன்மூலம் பெரும் நன்மையடைவார்கள்ன அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-33)

## நல்லூர் பிரதேச சபைப் பிரிவில்

# 11 நுண்கருத்திட்டங்களுக்கு டக்ளஸ் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் 11 நுண்கருத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிதியில் இருந்து நிதியை ஒதுக்கியுள்ளார்.

இதன்மூலம் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி விபரம் வருமாறு:-

★ செட்டித்தெரு முருகன் சனசமூக நிலையம் - 48, 500.

★ கொக்குவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையம் - 24, 250.

★ கொக்குவில் மத்தி சனசமூக நிலையம் - 97, 000.

★ கோண்டாவில் மேற்கு அமரகவி சனசமூக நிலையம் - 24,250.

★ கொக்குவில் மேற்கு வராகி அம்மன் சனசமூக நிலையம் - 24,250.

★ கொக்குவில் மேற்கு பிரம்படி சனசமூக நிலையம் - 24,250.

★ திருநெல்வேலி காளிகோவில் சனசமூக நிலையம் - 24, 250.

★ கொக்குவில் மேற்கு கலைவாணி சனசமூக நிலையம் - 48, 500.

★ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை - 4,85,000.

★ மருதனார்மடம் நுண்கலைப் பீடம் மற்றும் யாழ். பல்கலைக் கழகத்திற்கு இயந்திரக் கொள்வனவு - 1,94,000.

★ கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயம் - 97,000. (உ-18)

## கனடா பா. உ. கள் குழு

# இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

கனடாவின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அடங்கி குழுவொன்று இன்று இலங்கை வருகை தரவுள்ளது.

கனடா பாராளுமன்றத்தின் சபாநாயகர் பீற்றர் மில்கன், செனற்றர்களான டேவிற் சுமித், பிறேனல் அன்றிச்சுக், பாராளுமன்ற உறுப்பினர்களான புறூமன் றெவோல்ட், சுசெனறம்லே,பாராளுமன்ற அலுவலா மேரிமெக்டுயல் ஆகிய ஆறுபேர் கொண்ட குழுவினரே வருகை தரவுள்ளனர்.

இலங்கை வரும் இக்குழுவினர் கனடியத்தூதுவர் வெலறி றேமன்ட், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, அரசியல் விவகார அமைசசர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச் எம். பௌஸி, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அத்துடன் கண்டி தலதா மாளிகை உட்பட சில உல்லாசத் துறைகளையும் பார்வையிடவுள்ளனர். (தி- 61)

## யுனெஸ்கோ நிறுவனத்தின்

# நிறைவேற்று உறுப்பினராக

# கல்வி அமைச்சர் தெரிவு

(கொழும்பு)

யுனெஸ்கோ நிறுவனத்தின் நிறைவேற்றுச் சபை உறுப்பினராக கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த 140 நாடுகளின் வாக்குகள் மூலமே இவ்வுறுப்பினர் பதவி கல்வி அமைச்சருக்குக் கிடைத்துள்ளது.


1945 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பில் 1915 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

முன்னாள் கல்வி அமைச்சர்களான எம்.ஐ.ஆர்.எம்.ஈரிய கொல்ல, நிஷங்க விஜயவர்த்தன ஆகிய இருவரும் ஏற்கனவே இவ் வமைப்பில் நிறைவேற்று சபை உறுப்பினர்களாக அங்கம் வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(தி-61)



யாழ். அனைப்பந்தி மெ.மிஷன் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,நல்லூர்க் கோட்ட அரிமாக்கழகமும் ஒன்றிணைந்து நடாத்திய ஆசிரியர் தினவிழாவில் பிடிக்கப்பட்ட படம்.
(படம்: தாவடி நிருபர்)




ஞானக்குழந்தை இல்ல வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கலந்து கொண்ட பாலர் கல்விக்கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் சிறப்புரையாற்றுகிறார்.



பாலர் கல்விக் கழகத்தின் 38வது ஆண்டு வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர், முன்பள்ளி ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். (படங்கள்: செ.சுபானுஅஜானந்த்)

## தமிழர் பதவி உயர்வு = பப்பாமரம்




# ஒழுக்க விழுமியங்களை நிலை நிறுத்தும் பொறுப்பு கல்விச் சமூகத்திற்கேயுரியது

## கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர்

(கோப்பாய்)

சிறந்த கற்றல்,கற்பித்தல் செயறபாட்டின் ஊடாக முனைப்புடன் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றிப் பாட விதானத்துடன் இணைப் பாட விதானச் செயற்பாடுகளிலும் வெற்றி பெற உழைத்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் இந் நன்னாளில் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கி. சிவஞானசுந்தரம், அண்மையில் நடைபெற்ற ஆசிரிய தின விழாவில் தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்.

கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் நலன் புரிச் சங்கத் தலைவர் வ. ஆறுமுகம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

43 பாடசாலைகளை உள்ளடக்கிய கோப்பாய்க்கோட்டத்தில் 4 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டும் 2 பாடசாலைகள் இணைக்கப்பட்டும் உள்ள நிலையில் தற்போது 37 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன.இக்கோட்டத்தில் 13 ஆயிரத்து 699 மாணவர்களுக்கு 520 ஆசிரியர்கள் கல்விப்பணியை ஆற்றி வருகின்றனர்.

ஆரம்பக் கல்வி,நடனம், சித்திரம், உடற்கல்வி ஆகிய பாடங்களிற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போதிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் சளைக்காத வகையில் செயற்பட்டு,வலய மட்ட மாகாண போட்டிகளில் மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளமை அதிபர், ஆசிரியர்களின் அயராத முயற்சிக்கு கட்டியம கூறுவதாக அமைந்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளிலும் மாணவர்கள் குறிப்பிடத்தக்களவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளமைக்கு சான்றாகப் பரீட்சை சம்பந்தமான குறிகாட்டிகள் ஆதாரமாயுள்ளன.

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு வழிகாட்டி நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அதிபர், ஆசிரியர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும். அத்துடன் ஒழுக்க விழுமியங்கள் அருகி வரும் இவ்வேளையில் ஒழுக்கம் சார் விழுமியங்களை மீண்டும் நிலை நிறுத்தும் பாரிய பொறுப்பு கல்விச் சமூகத்தைச் சார்ந்ததாகும் என்று குறிப்பிட்டார்.

(உ-79)

# ஆட்சிக்குச் சவால் விடுக்கும் போராட்டங்களுக்கு முடிவு கட்ட பிரதமரால் ஐவர் கொண்ட குழு அமைப்பு

(கொழும்பு)

அரச சேவைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வேலை நிறுத்தப்போராட்டங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கென 5 அமைச்சர்களைக் கொண்ட விசேட குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கருஜெயசூரிய தலைமையிலான இக்குழுவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திலக்மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க,சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே,காணி அமைச்சர் ராஜிதசேனாரத்னா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

அண்மைக் காலமாக சுகாதார சேவை, தொடரூந்துச்சேவை ஆகியவற்றில் இடம்பெற்றுவந்த தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டங்கள் அரசாங்கத்தையே ஆட்டம் காணச் செய்யுமளவிற்கு விரிவடைந்திருந்தமையை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இனிவரும் காலங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதைத் தடுத்து, அரச சேவைகள் அனைத்தையும் சுமுகமான நிலையில் கொண்டு செல்வதற்கான உட்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துமாறு மேற்படி அமைச்சர் மட்டக் குழுவினைப் பணித்துள்ளார். (உ-10,63)

## வீடுகளை இழந்த மக்களுக்கு உதவு பொதிகள்

(மன்னார்)

மன்னார் வங்காலைப்பாடு என்னும் இடத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் உதவுபொருட்கள் அடங்கிய 32 பொதிகளை விநியோகித்துள்ளது.

அதேபோல் 'சற் ஓ ஏ'' அகதிகள் பராமரிப்பு நிறுவனம் கேத்தில்கள், சமையல் பாத்திரங்கள், லாந்தர் விளக்குகள், அவசர தங்கும் இடங்கள் போன்றவற்றை வழங்க முன்வந்துள்ளது.

இந்தத்தங்கும வசதிகள் இன்னும் சில தினங்களுக்குள் அமைத்து முடிக்கப்படும். இவைகளுக்கு மேலாக விடுதலைப்புலிகளும் இக்கும்பங்களுக்கு உடுபுடவைகளை வழங்கி உதவியுள்ளார்கள்.

புனர்வாழ்வு, மீளக் குடியமர்வு, அகதிகள் விவகார அமைச்சர் பணிமனை விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் மேற்கண்ட தகவல்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் வங்காலைப்பாடு எனுமிடத்தில் அண்மையில் ஏற்பட்ட தீவிபத்தில் 32 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன.

மன்னார் பெருநிலப்பகுதியைச் சேர்ந்த இக்கிறிஸ்தவத் தமிழ் குடும்பங்கள் வங்காலைப் பகுதியல் குடியமர்ந்து மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டுவருகிறார்கள் என்று அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

## மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட

# 8 புலி உறுப்பினர்களுக்கும் 23 ஆம்திகதிவரை விளக்கமறியல்

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்லடி சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் 8 உறுப்பினர்களையும் இம் மாதம் 23ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்குத்தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டியதற்கான அறிக்கை இன்னமும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஜுலை மாதம் 15ஆம் திகதி கைக்குண்டு, துப்பாக்கி ரவைகள் என்பனவற்றுடன் சென்றதன் காரணத்தால் கல்லடிப் பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். (தி-61)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புடைவைக் கடைக்குரிய பாவித்த சோக்கேஸ் விற்பனைக்குண்டு தொடர்பு : 201, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

### சேவை நலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவரும், சமாதான நீதிவானாக அண்மையில் நியமணம் பெற்றவருமான பிரம்மஸ்ரீ.வி. பரிபூரணானந்த சர்மாவின் சேவை நலன் பாராட்டுவிழா இன்று மு.ப. 10.மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(உ-18,103)

### கூட்டம்

(மண்டைதீவு)

யா/மண்கும்பான் அ.த.க. பாடசாலையின் பழையமாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று மு.ப 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-11)

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தை நீடிக்குமாறு பிரதமர் ரணில் பரிந்துரை

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பதவிக்



காலத்தை மேலும் ஒரு வருடகாலத்திற்கு நீடிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உட்பட பல அமைச்சர்கள் விரும்பம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை நீடிப்பது குறித்த முடிவை ஜனாதிபதி சந்திரிகா விரைவில் வெளியிடவுள்ளார்.

இந்நிலையில், அமைச்சர்கள் பலரும் ஜனாதிபதியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தமது மேற்படி விருப்பத்தை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஜேசுதாசன் என்ற போதைவஸ்து கடத்தும் நபரோடு தொடர்புடைய பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜாவை விசாரணை செய்து வரும் உள்துறை அமைச்சர் அவருக்கு தகுந்த தண்டனை வழங்குவதுடன்,அவரைப் பதவியில் இருந்து நீக்கி விட்டு அவருக்கு அடுத்த தரத்தில் உள்ளவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டும் எனவும்,

இத்தகைய பல குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தை நீடித்து அரசு பாதுகாப்பு வழங்க முற்படுமானால் பொலிஸ் தலைமை அலுவலகத்தை நாம் சுற்றிவளைப்போம் என்றும் சிஹல உறுமய கட்சி எச்சரித்



துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-63,10)

# ஆசிரியர் - மாணவர்கள் இணைந்து சுதந்திர செயற்பாட்டு ஆற்றுகை

(கிளிநொச்சி)

கல்வி அரங்கு அற நிலைச் செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியாகளும் கண்டாவளை மகாவித்தியாலய மாணவர்களும்ஒன்றிணைந்து கடந்த 9ஆம் திகதி சுதந்திர செயற்பாட்டு ஆற்றுகையொன்றை கண்டாவளை மகாவித்தியாலயத்தில் நிகழ்த்தியுள்ளனர்.

ஜீ.ரி.சற் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் கே.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், முதன்மை விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர். பா. அரியரத்தினம் மற்றும் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் த. குருகுல ராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-43)

# 6 ஆயிரத்து 645 வீடுகள் வலி. வடக்கில் முற்றாகச் சேதம்

(திருநெல்வேலி)

கடந்த 13 வருட காலமாக இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள வலி.வடக்குப் பகுதியில் 6 ஆயிரத்து 645 வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி பகுதியில் உள்ள 2 ஆயிரத்து 796 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், 3 ஆயிரத்து 849 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன.

அழிவடைந்துள்ள இவ்வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதியுதவி வழங்க முன்வந்த போதிலும் அவற்றைப் புனரமைப்புச் செய்யும் வகையில் அங்கு செல்வதற்கு படைத்தரப்பு மறுப்புத்தெரிவித்து வருகின்றது.

இதனால்,இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீண்டும் குடியேற முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், நலன்புரி நிலையங்களில் வாழ்க்கை நடாத்தி வரும் மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களையும் இன்னல்களையும் எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-43)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# பாடசாலை மாணவர்களும் போதைவஸ்துக்கு அடிமை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பிரபல பாடசாலை மாணவர்கள் போதைவஸ்துப் பொருள்களுக்கு அடிமையாகியிருப்பது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த நபர் ஒருவர் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே இத்தகவல் தெரிய வந்துள்ளது.


இதனடிப்படையில் அப்பாடசாலைகளில் கல்விகற்கும் 6 மாணவர்கள் உட்பட 41 பேரை பொலிஸார் இனங்கண்டுள்ளனர்.

கடந்த 6மாத காலத்தில் இம் மாவட்டத்தில் போதைப் பொருள் விற்பனை செய்த 116 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (தி-61)

### அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

ஒரு தொகை அடையாள அட்டைகளும் கடவுச்சீட்டுக்களும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவை பற்றிய விபரங்கள் நாளை வலம்புரியில் வெளியாகும்.





கோப்பாய் தெற்கு கோண்டாவில் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அன்னை திரேசா அமைதி இல்லத்தின் முகப்புத்தோற்றத்தையும்,

இதன் திறப்பு விழா நிகழ்வில் யாழ். ஆஜர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் இவ் இல்ல அமைப்புக்கான நிதி உதவியை வழங்கிய அவுஸ்திரேலியரான பிறியன் கக் லெற்றெல்ட் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தி. உமாசங்கர்)

# ஸ்ரீ. சு .க.-ஜே.வி.பி. பேச்சுக்கள் இம்மாத இறுதிக்குள் மீண்டும் ஆரம்பம்

### சுதந்திரக்கட்சி அரசியல் பீடம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதிக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இருகட்சிகளும் ஒருங்கிணைந்த அரசியல் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது அவசியம் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இத்தகைய தீர்மானம் ஒன்றை எடுத்தமை தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இது தொடர்பாக அக்கட்சி அறிவிக்குமாயின், தமது கட்சியின் அரசியல் பீட உறுப்பினர்களுடன் கலநதாலோசித்து தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, தமது கட்சியின் தீர்மானம் குறித்து மக்கள் விடுதலை முன்னணிக்கு விரைவில் அறிவிக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்மாத இறுதிக்குள் இரு கட்சிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# உப்பு விளைவிக்கப்படுவதால் உவர்நிலமாகும் விளை நிலங்கள்

(திருநெல்வேலி)


யாழ். செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தை அவ் இடத்தில் இருந்து அகற்றக் கோரி அயற்கிராம மக்களால் யாழ். அரச அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

செமமணியில் அமைந்துள்ள மாந்தைஉப்புக் கூட்டுத்தாபனத்தின் தொழில் சார் செயற்பாடுகளின் மூலம் கோப்பாய் தெற்கு மற்றும் நர்வேலிப்பகுதிமக்கள் பெரும் இடைஞ்சல்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் கோப்பாய் தெற்கு, மற்றும் நீர்வேலிப்பகுதிகளில் உள்ள விவசாய விளை நிலங்களில் ஒரு சில பகுதி பயிர் செய்வதற்கு ஏற்றதல்லாத உவர் நிலமாகப் படிப்படியாக மாற்றமடைந்து வருவதுடன், எதிர் காலத்தில் முற்று முழுதாக இங்குள்ள 8 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் உவர் நிலமாக மாறுவதற்குரிய சாத்தியக் கூறுகளும் ஏற்பட்டுள்ளன.

மேலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள உப்புத்திட்டிகளினால் அயலில் உள்ள குடிநீர் கிணறுகளில் சில படிப்படியாக உவர்நீராக மாறி வருகின்றன.

இனிவரும் காலங்களில் அப்பகுதிகளில் உள்ள கிணறுகள் யாவும் முற்றுமுழுதாக உவர் நீர்க் கிணறாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும்,இதன் காரணமாக உப்புக் கூட்டுத்தாபனத்தை அங்கிருந்து அகறறுமாறும் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-43)



யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற "ஆளுமை வளர்ச்சி" பயிற்சிப்பட்டறையிலே கலந்து கொண்ட அதிபர் திருமதி பொன்னம்பலம், அரசஅதிபர்எஸ்.பத்மநாதன், சுவாமி தத்பாஷானந்தா, சென்னை இராமகிருஷ்ணமிஷன் சுவாமி போதமயானந்தா, சுவாமி சித்ருபானந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# பொரி

நவராத்திரி தொடங்கும் போது . கொலுவைத்தல் எனும் முறையை ஏற்படுத்தியுள்ளனர். கொலுவைத்து அந்தக், கொலுவில் அதிக பொம்மைகளை வைத்தல். அந்தக் கொலுவைப் பார்ப்பதற்கென்றே நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் எல்லோரையும் அழைப்பது, அவர்களுக்குச் சிற்றுண்டி கொடுப்பது. இதன் மூலமாக ஒரு மனிதத் தொடர்பு அல்லது மனித உறவு ஏற்படுகின்றது. பார்த்தீர்களா? இது ஒரு முக்கியமான விடயம்.

இன்னுமொன்று என்ன வென்றால் கொலுவைக்கும் போது கன்னாபின்னாவென்று படிகளில் பொம்மைகளை வைக்காமல் அதற்கென்று தனி முறை இருக்கின்றது. அந்த முறைப்படியே அவற்றை வைக்கவேண்டும் எனப் பெரியவர்கள் கூறுவார்கள்.

அடித்தட்டில் கீழே முதலில் ஓரறிவுள்ள பொம்மைகளை வைக்கவேண்டும். அடுத்து இரண்டாவது தட்டில் ஈரறிவுள்ள பொம்மைகளை வைக்கவேண்டும். அடுத்து மூன்று அறிவுள்ள பொம்மைகள் என்று கூடிக்கொண்டே செல்கின்றது. இப்படியோர் ஒழுங்கின் படி அடுக்கப்பட்டால் தான் அது ஒழுங்கான கொலுவாக இருக்கமுடியும்.

மனிதனது பரிநாம வளர்ச்சியைக் கூறுவது என்ற ரீதியில் தான் கொலுவைக்கப்படுவதாகக் கூறுவார்கள். அலை மகள், கலைமகள், மலைமகளின் பெருமைகளைக் கூறுகின்ற விழாவாகவும் இது புகழப்படுகின்றது. ஒன்பது நாட்களையும் முடித்து விட்டு ஆயுத பூஜை கொண்டாடப்படும்.

நாம் பல காரியங்களையும் வெற்றியோடு செய்து முடிப்பதற்கு அந்தஆயுதங்கள் தேவைப்படுகின்றன. அவரவர் சம்பந்தப்பட்ட பொருட்களை அதாவது பாடசாலை மாணவன் என்றால் தனது பாடப்புத்தகம், தச்சர் என்றால் அதற்குத்தேவையான உபகரணங்கள் என்று ஒவ்வொருவரும் தமக்குத்தேவையான பொருட்களையும் வைத்து நாம் நன்றிகூறவேண்டுமல்லவா? அதனால் அதற்கென தனியாக ஓர் நாளை ஒதுக்கி ஆயுதப் பூஜை செய்யவேண்டும் என்று ஓர் பண்பாட்டை வகுத்துள்ளார்கள்.

நவராத்திரியில் இன்னுமொரு விடயத்தையும் நாம் நுட்பமாகக் கவனிக்க வேண்டும். என்னவென்றால் எத்தனையே பலகாரங்கள், பழங்களை வைத்தால் கூட இந்த நேரத்தில் பொரி கொடுத்தல் என்பது பெரிய விஷயமாகக் கருதப்படுகின்றது. அனேகமாக எல்லாப் பண்டிகைகளிலும் பொரி வைக்கப்படும். ஆனால் நவராத்திரியின் போது பொரி நிச்சயமாக வைக்கப்படும். அதற்கு ஆன்மீக ரீதியில் ஒரு காரணத்தைக் குறிப்பிடுகின்றனர். அதாவது வாயில் போட்டு மெல்வதற்காக அல்ல, நீயும் பொரி மாதிரி ஆகி விடு என்பதற்காகத்தான். பொரி கொடுக்கப்படுகின்றது.

ஒரு மகான் சொல்கின்றார். ஆன்மீக விழாக்களில் பொரி கொடுப்பது ஏனென்றால் மனிதன் மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டோ இருக்கின்றான்! எவ்வளவு காலம் தான் இப்படிப் பிறந்து கொண்டே இருப்பான்? அவன் இறைவனது திருவடியை அடையும் பிறவாத சூழலை அடைகின்ற நிலைக்கு வரவேண்டும். அதற்கேற்றபடி அவன் ஆன்மாவை வளப்படுத்தவேண்டுமல்லவா? திரும்பவும் பிறக்காத நிலையை அடைய வேண்டும். இதைத்தான் பொரி உணர்த்துகின்றது. ஏனென்றால் அது நெல்லாக இருக்கும் போது விதைத்தால் முளைக்கும். ஆனால் பொரியாக வறுத்த பின் முளைக்காது. ஆகவே முளைக்கின்ற நெல்லாக இருக்காமல் விதைத்தால் முளைக்காத நெல்லாக நீ மாறு என்னும் நுட்பத்தை உணர்த்துவதற்குத தான் பொரி கொடுக்கப்படுகின்றது என்றார்.

விஜயதசமி அன்று புதிதாக வித்தைகளைக் கற்கச் செல்பவர்களுக்கு வாய்ப்பேற்படுத்திக்கொடுக்கப்படும். புதிதாகப் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் சேர்ப்பார்கள். நாட்டிய வகுப்பில் புது மாணவர்களைச் சேர்ப்பார்கள்.

ஒரு தாயார் தனது பிள்ளையை பள்ளிக் கூடத்தில் சேர்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். பையனும மிகவும் உற்சாகமாக வெளிக்கிட்டான். புதிய ஆடைகளை அணிந்து புதிய புத்தகங்களுடன் மிகுந்த உற்சாகத்துடன் பாடசாலைக்குச் சென்றான்.

பாடசாலையில் புதிய இடங்கள், புதிய முகங்கள், ஆசிரியர்கள், பிள்ளைகள் எல்லாவற்றையும் பார்த்தவுடன் மிகுந்த சந்தோஷம். மாலைவரை சந்தோஷமாக அங்கேயே இருந்தான். வீட்டிற்கு வந்து நன்றாகத் தூங்கினான். அதிகாலை அவனது தாயார் அவனை எழுப்பினார். அவன் எழும்பிக்கேட்டான் "ஏனம்மா எழும்பினீர்கள்?" தாயாா சொன்னார். பள்ளிக்கூடம் போக வேண்டுமல்லவா? தூங்கியது போதும் எழுந்துவா!" என்றார். பையன் சொன்னான். இன்றும்போகவேண்டுமா? நான் நேறறு மட்டும் என்றல்லவா நினைத்திருந்தேன்" என்றானாம்.

இளசை எஸ். சுந்தரம்

---

தலைவர் பிரபாகரன்- அமைச்சர் ஹக்கீம்

## ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் செய்வதன் மூலமே தமிழ்-முஸ்லிம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்

### பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் -முஸ்லிம் சமூகங்களிற்கிடையே அடிக்கடி பேச்சுவார்த்தைகள் மற்றம் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலமே, அவ்விரு சமூகங்களிற்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வுகளைக் காணமுடியும்.

இவ்வாறு வீடமைப்புப் பிரதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான வசீர் சேகுதாவுத் கடந்த வியாழக் கிழமை இரவு ஏறாவூரில் நடைபெற்ற கலாசார நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்களுக்கிடையே ஏற்படும் உடன்பாடுகள் மூலமாகவே, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்.

ஒரு சமூகத்தின் பிரச்சினைகளை மற்றைய சமூகம் உணர்ந்து கொள்ளாது. இந்த வகையில் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு அந்தச் சமூகத்தின் மூலமே தீர்வு காணமுடியும்.

இதனால், அச்சமூகத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் இடையே வன்னியில் வைத்துக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் செய்வதன் மூலமே,

இரு சமூகங்களுக்கும் இடையே ஏற்பட்டுவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் மேலும தெரிவித்தார். (தி-61)

## உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் அகிம்சைப் போராட்டத்திற்குத் தயார்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக் குறித்து இரண்டு வார காலத்தினுள் சாதகமான பதில் தரப்படாவிட்டால் மாகாண அமைச்சுக்கு முன்பாக அகிம்சை வழிப்போராட்டத்தில் குதிப்போம்.

இவ்வாறு உடற் கல்வி டிப்ளோமா தாரிகள் சங்கம் விடுத்துள்ள செய்திக குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எமது சங்கத்தின் தலைவர் ப. தர்மகுமாரன் மற்றும் சங்கப் பிரதிநிதி கே.உமாகஜன் ஆகியோருடன் பேச்சு நடத்தியிருந்தார்கள்.

இதில் டிப்ளோமாப் பட்டதாரிகளின் வேலை வாய்ப்புத் தொடர்பாக இரு வாரங்களில் இறுதி முடிவைத்தருவதாக உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

உடற்கல்வி டிப்ளோமாப் பட்டதாரிகளாகிய நாம் கடந்த 3வருடகாலமாக வேலை வாய்ப்பின்றி அவதிப்படுகின்றோம்.

அதேவேளை, எமது பிரச்சினை தொடர்பாக இந்து கலாசார அமைச்சு மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்தற்குக் கொண்டு வருகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தின் தூண்கள்

### மானிப்பாய் அரசியல் பொறுப்பாளர் உரை

(சுதுமலை)

முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தின் தூண்கள். அவர்கள் என்றும் மதிப்புடன் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் மானிப்பாய் பிரிவு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. பவநீதன்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்களன்று மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஜே.செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பவநீதன் மேலும் கூறுகையில்,

ஒரு பிள்ளையின் கல்வி முன்பள்ளியிலேயே ஆரம்பிக்கின்றது. ஓர் மனிதனின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு அத்திபாரமாக இருப்பது முன்பள்ளிக் கல்வி. அந்தக் கல்வியை மாணவர்களிற்கு வழங்கும் ஆசிரியரின் பணி மகத்தானது.

முன்பள்ளிகளின் கண்காட்சி, பரிசளிப்புவிழா, விளையாட்டுப்போட்டி போன்றவற்றில் பெற்றோர்களின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. ஆசிரியைகளும் ஒரு சில பெற்றோர்களுமே இந்நிகழ்ச்சிகளுக்கு தேவையான ஆயத்தங்களை செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அநேகமான பெற்றோர்கள் நிகழ்ச்சி ஆரம்பித்த பின்புவந்து பார்த்து விட்டுச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலை மாறி தமது பிள்ளைக்காக, தமது சமூகத்திற்காக சிறிது நேரத்தை ஒதுக்கப்பெற்றோர்கள் முன்வர வேண்டும் என்றார்.

மேலும் சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.செல்வராசா, வலிகாமம் வலய முறைசாராக் கலவி உதவிப் பணிப்பாளர் எஸ். சிவ நேசன், முன்னாள் சுதேச மருத்துவத் துறை மாகாணப் பணிப்பாளர் ப.உரோமகேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுப் பணிப்பாளர் ஜெயராஜ ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் 25வருட சேவை முடித்த 30ற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (உ-252)

## இராசி பலன்

**12.10. 2003**

**(புரட்டாதி 25, ஞாயிறு)**

**துதியை- பி.ப.4.37 வரை**

**அச்சுவினி மு.ப.6.32 வரை**

**பரணி மு.ப.6.33 தொடக்கம்**

**இராகுகாலம் - 4.32 - 6.02**

**சுபநேரம் - 9.02 - 10.32**

**மேடம்**
அதிக பிரயாசை, பெரியோர் ஆதரவு, புதிய முயற்சி, சிந்தனை மிகுதி.

**இடபம்**
காரிய அலைச்சல், கௌரவக்குறைவு, போசனசுகக் குறைவு, பணவிரயம்.

**மிதுனம்**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் உதவி, பொருள் சேர்க்கை, குடும்பநலன்.

**கடகம்**
இஷ்ட சித்தி, ஆரோக்கியம், முயற்சி பலிதம், மேன்மை.

**சிங்கம்**
புதிய சிந்தை, பிரயாணம், வேலைக் கஷ்டம், பொருள் விரயம்.

**கன்னி**
பிரயாண பயம், வீண்பகை, உடல் நலக்குறைவு, காரிய தாமதம்.

**துலாம்**
மனோ சௌக்கியம், கீர்த்தி, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை.

**விருச்சிகம்**
காரிய அனுகூலம், தெய்வசிந்தை, பொருள் சேர்க்கை, சத்துரு ஜெயம்.

**தனுசு**
காரிய நாசம், குடும்பக் கவலை, ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை.

**மகரம்**
மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தன விரயம், கட்டுப்பாடு.

**கும்பம்**
நற்கீர்த்தி, காரிய சித்தி, பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை.

**மீனம்**
அதிக செலவு, போசன சுசக் குறைவு, குடும்பக் கவலை, காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

நெருங்கிவரும் தீபாவளிப் பண்டிகையை ஒட்டி

## இந்தியப் புடைவை வியாபாரிகள் குடாநாட்டிற்குப் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியப் புடவை வியாபாரிகள் யாழ்.குடாநாட்டிற்குப் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் அமைதி ஏற்பட்டு, ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் படிப்படியாக வரஆரம்பித்த இவர்கள், நெருங்கி வரும் தீபாவளிப் பண் டிகையை முன்னிட்டு பெருமளவில இங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

வீடு வீடாகச் சென்றும் பொது இடங்களிலும் இவர்கள் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதனையும் இவர்களைச் சூழ நல்ல சனக் கூட்டம் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

குடாநாட்டில் உள்ள புடவைக் கடைகளிலும் பார்க்க, மலிவான விலையில் தரமான புடவைகளை இவர்களிடம் பெறமுடிவதாக மக்கள் பேசிக்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. (உ-16)

## லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் பந்துலவின் நற்பெயருக்கு களங்கம் 50 கோடி நட்டஈடு கோருகிறார்

(கொழும்பு)

பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்த்தன லேக்ஹவுஸ் நிறுவனத்தினர் தனக்கு 50 கோடி ரூபா நட்டஈடு தரவேண்டும் என கோரியுள்ளார்.

இலங்கை பத்திரிகைச் சங்கத்தின் வெளியீடான தினமின பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அவர் நீதி மன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ஆம்திகதி தினமின பத்திரிகையில் டேவிற் சித்திரபேன என்பவர் எழுதிய செய்தியிலேயே அவதூறு காணப்படுவதாகவும் இதனால் ஒரு அரசியல்வாதி என்ற வகையிலும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், திரைப்பட தயாரிப்பாளர் என்ற வகையிலும் தனது பெயருக்கு அவதூறு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (உ-6)

*தன்னுயிர் இன்னாமை தானறிவான் என்கொலோ மன்னுயிர்க்கு இன்னா செயல்*
*- குறள்*

வலம்புரி

## செய்தியாளர் மீது தொடரும் தாக்குதல்

சமாதான சூழ்நிலை நிலவி வருவதாகக் கூறப்பட்டு வருகின்ற போதிலும், யாழ்.குடாநாட்டில் அடிக்கடி இராணுவ வாகன விபத்துக்கள் இடம் பெறுவது சாதாரண விடயமாக மாறிவிட்டது.

இத்தகைய விபத்துக்கள் இராணுவத்திற்கும், பொது மக்களுக்கும் இடையே முறுகல் நிலையைத் தோற்றுவிப்பதால் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்ச நிலை தோன்றியுள்ளது. இது ஒரு புறம், மறுபுறத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுகின்றபோது செய்திகளைச் சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்கள் சம்பவ இடங்களுக்குச் செல்கின்ற போது அவர்கள் மீது இராணுவம் தாக்குதல்களை நடத்துவது, சாதாரண நிகழ்வாகிவிட்டது.

யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை செய்தியாளர்கள் தாக்கப்படுகின்ற விடயத்தை யாருமே கவனிப்பதாகத் தெரியவில்லை. ஊடகவியலாளர்களுக்குரிய அடையாள அட்டைகளுடன் சம்பவ இடங்களுக்குச் செல்கின்ற ஊடகவியலாளர்கள் தம்மை உரிய முறையில் இனங்காட்டிக் கொள்கின்ற போதிலும் அவர்கள் மீது இராணுவம் மேற்கொள்கின்ற தாக்குதல்கள் திட்டமிடப்பட்டவை என்றே கருத வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் நேற்றைய தினம் அரியாலை மாம்பழம் சந்தியில் இடம் பெற்ற இராணுவ வாகனம்-ஓட்டோ விபத்தில் தகவல்களைச் சேகரிக்கச் சென்ற வலம்புரிச் செய்தியாளர் கே.இதயபவன் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவர் வைத்திருந்த புகைப்படக் கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இத்தகைய சம்பவங்கள் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீது இராணுவம் பகைமையுணர்வைக் கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

தான் ஒரு ஊடகவியலாளர் என்று தன்னை அறிமுகப்படுத்திய பின்னரும் வலம்புரிச் செய்தியாளர் இராணுவத்தால் தாக்கப்பட்டுள்ளார் எனில் தமிழ் மக்களுக்கு-ஊடகவியலாளர்களுக்கு இருக்கக் கூடிய பாதுகாப்பு என்ன? இது விடயத்தில் தகவல் தொடர்பாடல் அமைச்சு-பொலிஸ் நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்ற கேள்விகள் பொது மக்கள் தரப்பில் எழவே செய்கிறது.

செய்தியாளர்கள் தாக்கப்படுவதும், அது தொடர்பான கண்துடைப்பு விசாரணைகள் நடைபெறுவதும் இனிமேல் செய்தியாளர்கள் தாக்கப்படுவது இடம்பெறாதென உறுதியளிப்பதும் வெறும் வெட்டிப் பேச்சாகிவிட்டதால் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஊடகவியல் சார்ந்த அமைப்புகள் தீவிர அக்கறை எடுப்பது அவசியமாகும்.

# ஆரோக்கியமான குடும்பச் சூழலே

# நல்லதோர் நாட்டை உருவாக்க உதவும்

ஒரு நாட்டில் நல்லாட்சி நடக்கிறது என்றால், அந்நாடு எல்லா வகையிலும் முன்னேற்றமான செயற்பாடுகளை முன்னெடுப்பதே காரணமாக அமைகின்றது. அம்முன்னேற்றங்களும் சரியான முறையிலே நடைபெறுவதற்கு அங்குள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றினதும் நிறைவான பங்களிப்பே காரணமாக அமைந்து விடுகின்றது. எனவே குடும்பங்களே எல்லா முயற்சிகளின் வெற்றிக்கும் உந்துசக்தியாக இருக்கின்றன.

யாழ். மறைமாவட்ட திருச்சபை குடும்ப தினத்தைக் கொண்டாடுகின்றது. இந்நாளிலே ஒவ்வொரு குடும்பமும் இறையன்பும், பிறரன்பும், சமூக விழிப்புணர்வும் உள்ள பல்கலைக் கழகங்களாகத் திகழ்வதற்கு இறையாசீர் வேண்டுவோம்.

### இடர்பாடும் முயற்சியும்

இன்றைய நாட்களில் குடும்பங்களிலே பலவகைப்பட்ட முரண்பாடுகள் காணப்படுகின்றன. கணவன் மனைவிக்கிடையில் ஒருவரை ஒருவர் மதிககாத போக்கும், பெற்றோரைப் பிள்ளைகள் அலட்சியம் செய்யும் நிலையும் மலிந்து காணப்படுகின்றது. அயல் குடும்பங்களே ஒன்றையொன்று நம்பாத நிலையும், உறவற்ற நிலையிலும் வாழ்ந்துகொண்டு காலம் கழிக்கின்றன. இந்நிலையில், குடும்ப உறவுகள் எப்படிக் கட்டிக் காக்கப்படும்? குடும்பங்களிடையே அன்புறவு வளரும்? அடுத்தவரைச் சுரண்டி தானும் தனது குடும்பமும் பண வாய்ப்பும், வசதிகளும் நிறைந்தவர்களாக வாழ எத்தனிக்கும் நிலைகளே இக்கால நிலையாக மாறிககொண்டிருக்கின்றது. இதனை மாற்றி அர்த்தமுள்ள குடும்ப வாழ்வை எம்மிடையே வளர்த்து புரிந்துணர்வுள்ள, ஒருமைப்பாட்டுடன் கூடிய குழு வாழ்வை எமது குடும்பங்களிலே வளர்த்தெடுக்க நாங்களே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடுத்தவரைக் குறை கூறிக் கொணடு அதே பிழைகளை நாமும்



விட்டுக்கொண்டிருப்போமானால் எமக்கு அறிவுரை கூறத் தகுதியில்லை, தலைமைதாங்க அருகதையில்லை.

### நன்மாதிரியே பலன்தரும்

"ஆண்டவருக்கு அஞ்சுவோர்; அவருடைய சொற்களைக் கடைப்பிடிப்போர்; அவர் மீது அன்பு செலுத்துவோர் அவர்தம் வழிகளைப் பின்பற்றுவர்" (சீராக் - 2:15) குடும்பத்தில் பெற்றோர் நன்மாதிரிகளாக இருக்கும்போது பிள்ளைகளுக்கு அவற்றைக் கற்பிக்கவேண்டிய அவசியம் இல்லை. எம்முடைய நாளாந்த வாழ்வையே பிள்ளைகள் பின்பற்றி நடக்கின்றார்கள். எமது பிழைகளைப் பிள்ளைகளே எமக்கு முன் வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். அதேபோல எமது நற்செயல்களையும் அவர்கள் வாழ்வது எமக்கு பெருமை தருவனவாகும். பிள்ளைகள் எமது செயல்களை எடுத்துக்காட்டும் கண்ணாடிகள். எனவே, பெற்றோரின் மாதிரிகைகளே அவர்களை நல்வழிப்படுத்தவும், தீய வழிக்கு இட்டுச் செல்லவும் காரணமாக அமைகின்றன. எம்முடைய கோபம், எம்முடைய மூர்க்கத்தனம், எம்முடைய விட்டுக்கொடுக்காத மனோநிலைகள் போன்றவையே பிள்ளைகள் பெற்றோருக்கு எதிராகச் செயற்பட வைக்கின்றது. நாம் வளர்த்த பிள்ளைகள் நமது வளர்ப்பாலே நல்லவனாகவோ, தீயவனாகவோ வாழக் கற்றுக் கொள்கின்றான். திருக்குடும்பத்தின் வாழ்வை நோக்கின், இயேசு ஞானத்திலும், அறிவிலும், உடல்வலிமையிலும் வளர்ந்தார் என்னும்போது, பெற்றோரின் வளர்ப்பை நாம் அறிந்து கொள்ளலாம்.

### நல்லவை செய்ய முயற்சிப்போம்

நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம் என்பார்கள். பல்கலைகளையும் நாம் பழக ஆரம்பிப்பது எமது குடும்பத்திலே தான். அதன் விரிவாக்கமே சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ளதாக அமைகின்றது.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பர். நாம் குடும்பத்திலே கைக்கொள்ளும் வாழ்க்கை முறையே எமது தலைவிதியையும் நிர்ணயிக்கின்ற ஒன்றாக இருக்கின்றது. "உள்ளத்தின் நிறைவின் நின்றே வாய் பேசும்" எமது வார்த்தையும், செயல்களுமே எமது வாழ்வை அளக்கும் கருவிகளாகும். குடும்பங்களிலே வாழும் நாம் நல்ல மதிப்பீடுகளுடன் கூடிய குடும்ப வாழ்வை வாழ முன் வருவோம். தீயவற்றைக் களைந்து நல்லவற்றை எம்மோடு சேர்த்துக் கொள்வோம். "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" என்பது போல நல்லவைகளாலே தீயவைகள் தலைதூக்காது ஒழிய நல் முயற்சிகளை முன்னெடுப்போம். இயேசுவின் திருக்குடும்ப வாழ்வைப் பின்பற்றுவோம். புனித மரியாள், புனித சூசை ஆகிய பெற்றோரைக் கண்டு பாவிப்போம். அவதூறுகளைக் களைந்து மற்றவர்களுக்கு அபகீர்த்தி உண்டுபண்ணாது நீதி, நியாயத்தின் வழியில் செயற்படுவோம். செயற்கரியன செய்து நற்சமுதாயம் மலரவும், வளரவும் எம்மாலான ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் கொடுப்போம். இந்நாட்களில் இவற்றிற்காக உறுதியெடுப்போம். □

## பரமபிதா காட்டிய பாதை

**ஆசீர் அன்ரனி ராஜன்**

# ஈழப் பெண்களுக்கு சர்வதேச அந்தஸ்த்தை

# பெற்றுத்தந்தவர் தலைவர் பிரபாகரன்

## மாலதி நினைவுநாளில் செம்மணன் உரை

(யாழ்ப்பாணமம்)

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நின்றால், எமது இனத்திற்கு விரைவில் விடுதலை கிடைக்கும் என யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் கோப்பாய் தரவைப் பகுதியில் நடைபெற்ற 2ம் லெப்டினன் மாலதியின் நினைவுத்தூபி அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் உரையாற்றுகையில், தெரிவித்த அவர்,

உலகின் நான்காவது வல்லரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியா, இலங்கை அரசுடன் இணைந்து புலிகளையும் அவர்கள் மேற்கொண்டு வந்த இன விடுதலைப் போராட்டத்தையும் அழித்துவிட வேண்டும் என எண்ணிச் செயற்பட்டபோது, எமது மக்கள் தம் உயிரைக் கொடுத்து எம் விடுதலைப் பயணத்தை நாம் தொடர பேருதவி புரிந்தனர்.

இவ்வாறு இரவு பகலாக மக்கள் எம் போராட்டத்திற்குத் தந்த ஆதரவும், அதற்காகச் செய்த தியாகமும் விடுதலை நோக்கி வேகமாக நகருவதற்கு ஓர் உந்து சக்தியையும், பலத்தையும் எமக்குத் தந்தது.

இதனால் எம்மை அழிப்பதற்கு இந்தியப் படைகள் செய்த ஒவ்வொரு முயற்சியையும் முறியடிக்க நாம் செய்த சமர்களில் பெண்புலிகள் தமது கணிசமான போர்ப் பங்களிப்பைச் செய்து தமிழீழப் பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினர்.

இதன் பயனாக, இன்று தமிழீழப் பெண்கள் உலக அரங்கில் பேசப்படும் சமூக அந்தஸ்த்தைப் பெற்றவர்களாக இருந்து வருகின்றனர்.

இத்தனைக்கும் எமது இனப் பெண்கள் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக நோக்கப்படவேண்டும் என்ற தேசியத் தலைவரின் தூரநோக்குடைய சிந்தனையே காரணம்.

இச்சிந்தனையும், சிந்தனைக்கு ஏற்ப அவர் கொடுத்த செயல் வடிவமும் தான் கெரில்லாச் சமர், முறியடிப்புச் சமர், முற்றுகைச் சமர், மரபுவழிச் சமர் எனப் பலவற்றையும் தமிழீழப் பெண்கள் படையணிகள் எதிர்கொண்டு, வெற்றிகளைக் குவித்த சாதனையாளர்களாக உலகில் கருதப்படக் காரணமாயுள்ளது. இதற்கு ஈழத்தில் வித்திட்டவர் இரண்டாம் லெப்டினன் மாலதியே என்றார்.

(உ-4)

## திினசரி தியானம்

### பிரம்மனது தன்மை

உலகம் துன்பங்கள் நிறைந்தது. ஆனால், பிரம்மன் எல்லா வகையிலும் தூய்மையானவர். தீமைகள் அவரை எப்போதும் அணுகுவதில்லை. வாலிபமும் குழந்தைப் பருவமும் முதுமையும் உடலைச் சார்ந்தனவேயன்றி ஆன்மாவைச் சார்ந்தவையல்ல. குருட்டுத்தன்மை, செவிட்டுத்தன்மை போன்றவை புலன்களைச் சார்ந்தவை. ஆன்மாவைச் சார்ந்தவையல்ல. இதுபோல் உலகில் காணப்படும் குறைகள் பிரம்மனைச் சார்ந்தவையன்று.

சுவாமி சிவானந்தர்

# புலிகள் - க.கா.குழு மன்னாரில் சந்திப்பு

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், மன்னார் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் மன்னார் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.அமிர்தாப், மன்னார் மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் மூர்த்தி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் தமிழ்மக்கள் மீது படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் குறிப்பாக திடீர் சோதனை நடவடிக்கைகள், சுற்றிவளைப்புக்கள் ஆகியன குறித்து கண்காணிப்புக் குழுவுக்கு விடுதலைப் புலிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.(உ-64,10)

# வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்த அமெ. பிரதிநிதி இலங்கை வருவார்

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவது பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடவென சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் அடுத்த வாரமளவில் இலங்கை வரவிருப்பதாக அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. இருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ள அமெரிக்க பிரதி வர்த்தக பிரதிநிதி ஜோசெற் ஷெரோன் ஷினார் இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது பற்றி வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் கலந்துரையாடவுள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமிடையேயான ரிபா(TIFA) என்னும் ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க தூதுவருக்கும் இலங்கையின் சிரேஷ்ட அதிகாரிகளுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெறுமென அமெரிக்கத் தூதரகம விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக முதலீட்டு விவகாரங்கள் பற்றி கலந்துரையாடவென கடந்த 2002 யூலையில் இவ் ஒப்பந்தம் (TIFA) கைச்சாத்திடப்பட்டிருந்தது. (ந-106)

# விடுதலைப் புலிகள்-முஸ்லிம் சந்திப்புகள் திருமலையிலும் நடைபெறவேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைப் போன்று திருகோணமலை மாவட்டத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும்.

அண்மையில் கிண்ணியாவில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து கடந்த வியாழக்கிழமை அப்பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினமும் அங்கு தங்கியிருந்து முக்கியகலந்துரையாடல்களில் ஈடுபட்டபோதே இதனைத் தெரிவித்தார்.

அக் கலந்துரையாடல்களில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் இம்மாவட்டத்தில் வாழும் முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையேயான சந்தேகங்கள் களையப்பட வேண்டும். இதற்கு இரு சமூகங்களுக்கிடையேயான கருத்துப் பரிமாறலகள அவசியம இக கருததுப் பரிமாறல்களின் போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளின் பங்களிப்பும் இன்றியமையாதது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு சமூகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை மூலம்,பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வுகள் காணப்பட்டன.

இந் நடைமுறையை திருகோணமலையிலும் கடைப்பிடித்தால், அங்கு ஏற்படும் வன்முறைகள், கொலைகள் மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தலாம் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (தி-61)

# தப்பியோடிய படையினர் பாவித்த ஆயுதங்கள் எல்லாம் என்னவாயின

## ஒக்ஸ்போம் திட்ட பிரதிநிதி வினா

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்புப் படையில் இருந்து ஆயுதங்களுடன் தப்பியோடிய 50 ஆயிரம் இராணுவத்தினரதும் ஆயுதங்கள் எல்லாம் எங்கே என்ற வினாவை ஒக்ஸ்போம் திட்டப் பிரதிநிதி பீல்ஸ்மொண்டி எழுப்பியுள்ளார்.

கடந்த வியாழனன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரையாற்றும் போதே மேற்படி வினாவை இவர் எழுப்பியுள்ளார்.

உலக நாடுகளில் அதிகரித்து வரும் ஆயுதபாவனையைக் கட்டுப்படுத்தும்நோக்கில் அது குறித்த வர்த்தக உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து ஆராயும் வைபவம் கடந்த வியாழனன்று கொழும்பில் நடத்தப்பட்டது.

அங்கு இது விடயம் தொடர்பாக அவர் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் கருத்துதெரிவிக்கையில்;

இலங்கையில் சிறியரக ஆயுதங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆயினும் வட-கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள வெடிப்பொருட்கள் இன்னமும் முற்றாக அகற்றப்படவில்லை.

இவற்றின் காரணமாகவும் வன்செயல்களால் பாதிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் சிறுபிறு ஆயுதங்களின் பாவனையாலே குற்றச்செயல்கள் பல்கிப் பெருகியுள்ளதாக பொலிஸாரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எனினும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் இலங்கை அரசு ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். படையணிகள் கலைக்கப்பட வேண்டும். ஆயுதப்பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு அரசாங்கம் மாற்று வாழ்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆனால் அரசு இது குறித்து எந்தவொரு கவனமும் எடுக்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். (உ-18)

### நேற்றைய...

ளுக்கு உள்ளாகினர்.

இதேவேளை, சம்பவ இடத்தில் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையில் கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொது மக்களைத் துரத்திச் சென்ற படையினர் இளைஞர்கள் மூவரைப் பிடித்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதாகத் தெரிய வருகிறது. (த-4,7)

### அவசர சிகிச்சைப்...

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் பொது மக்கள் வாகனங்களை நிறுத்துவதற்குப் பொலிஸார் நேற்றிரவு முதல் தடை விதித்துள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் பொதுமக்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்க வேண்டாமென வைத்தியசாலைப் பாதுகாப்பு ஊழியர்களுக்குப் பொலிஸார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (த)

### கண்காணிப்புக்குழுவினரின்...

இதற்கிடையில் சம்பவ இடத்திலிருந்து விபத்துக்குள்ளான இராணுவ வாகனத்தைப் படையினர் அகற்றுவதற்கு முயன்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் இராணுவ வாகனத்தின் மீது கற்களை வீசினர். அதே நேரம் அப்பகுதியில் தரித்துநின்ற கண்காணிப்புக் குழுவினரின் வாகனமும் கல்வீச்சுக்கு இலக்கானது இதில் வாகனத்தின் முன்கண்ணாடி முற்றாக நொருங்கியதுடன் வாகனத்தின் ஏனைய பக்கக் கண்ணாடிகளும் சேதத்திற்குள்ளானது.

இதனையடுத்து கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்திலிருந்து விலகிச் சென்றனர். (த-4.7)

## புலிகளின் பிரதிநிதிகள் நோர்வேக்குச் செல்வர்

(நமது நிருபர்)

டென்மார்க்கில் தற்போது தங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நோர்வே செல்லவுள்ளனர்.

நோர்வே செல்லும் இக் குழுவினர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்செனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் (ம)

### கண்காணிப்புக்குழு அலுவலகம்...

படையினரும் பொலிஸாரும் மேற்கொண்டு வரும், இத்தகைய அடாவடித்தனத்திற்கு கண்காணிப்புககுழு முடிவுகட்ட வேண்டுமெனக் கோரி குடாநாட்டு ஊடகவியலாளர்கள் இன்று கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் அரியாலை மாம்பழம் சந்தியில் படையினரால் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன் வன்மையாகக் கண்டித்துள்ளார். (த-43)

### அரியாலை மாம்பழம்...

படையினரைத் தாக்கினர். இதனால் அப்பகுதி பெரும் ரணகளப்பட்டு போர்க்களமாக மாறியது. உடனடியாக பெருமளவு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டு படையினர் குவிக்கப்பட்டதால் அப்பகுதியில் நேற்று இரவு வரை தொடர்ந்தும் பதற்றம் நீடித்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நிலைமையை நேரில் பார்வையிட்டனர். எனினும் அவர்களால் உடனடியாக சுமுக நிலையை ஏற்படுத்தமுடியவில்லை.

இதேவேளை சம்பவம் குறித்து செய்தி சேகரிக்க ஸ்தலத்திற்குச் சென்ற வலம்புரிச் செய்தியாளர் குழுவில் இருவர் படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இதில் அலுவலகச் செய்தியாளர் கே.இதயபவன், கடுமையாகத் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். செய்தியாளர் ஜே.ஜெராட் தாக்கப்பட்டு சிறுகாயங்களுக்குள்ளானார்.

அததுடன் செய்தியாளர் கொண்டு சென்ற புகைப்படக் கருவி(டிஜிற்றல் கமரா) படையினரால் பறிக்கப்பட்டதுடன் அவர்கள் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. மேலும் உதயன் மற்றும் தினக்குரல, செய்தியாளர்களும் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க யாழ்.குடாநாட்டில் முற்றுப்புள்ளியில்லாமல் தொடரும் படைவாகனங்களின் விபத்துச் சம்பவங்களால் அநியாய உயிரிழப்புக்களும், இயல்பு நிலைப் பாதிப்பும் ஏற்பட்டு வருகின்றமை இங்கு நோக்கத்தக்கது.

இவற்றைக் கட்டுப்படுத்த இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை மக்களை பெரும் விசனமடையச் செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(இ-4,7,88,18)

### கண்காணிப்புக்குழுவுடன்...

களில் இடம் பெற்ற விபத்துக்களையும் பார்க்கும் போது இராணுவம் வேண்டும் என்றே மக்களைச் சீண்டி கோபமூட்டி அமைதியைக் குழப்பும் முயற்சியில் இறங்குவதாகவே கருத வேண்டியுள்ளது.

மேலும் இதுபற்றி ஏற்கனவே பல தடவைகள் எமது வருத்தத்தையும் கண்டனத்தையும் தெரிவித்த போதும் படைத்தரப்பு நிலைமையை மேலும் மேலும் மோசமாக்கும் நிலைப்பாட்டையே எடுத்துவருகின்றது.

தவறைச் சுட்டிக் காட்ட முனையும் போது கண்ணீர்ப் புகைக் குண்டு துப்பாக்கிச் சூடு, தடியடியென மக்களது உணர்வுகளை மதிக்காது, இராணுவம் தாக்குதலை மேற்கொள்கிறது, இச் சம்பவங்கள் மக்களின் வீதியில் நடமாடும் சுதந்திரத்தைப் பறிப்பதாகவேயுள்ளது.

இவ்விடயத்தில் படைத்தரப்பு மக்களின் கொதிப்பை மேலும் கிளறும் விதமாக ஆயுதப் பிரயோகம், தடியடி, கண்ணீர்ப்புகைத் தாக்குதல் எனவும் பெரியளவில் படையினரை அப்பிரதேசத்தில் குவித்து அப்பிரதேசத்தை இராணுவ மயமாக்குவதும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலாகும். அத்தோடு மக்களின் நடமாட்டத்தை முடக்கும் மோசமான மனித உரிமைமீறலுமாகும்.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாதிருக்க மனித உரிமை ஆணைக்குழுவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், உறுதிப்படுத்தவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் போது அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த சுதாஸ், கவியன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ந-5)

### இந்திய...

கள்பற்றி கலந்துரையாடப்படும். இக் கூட்டத்திற்கு இருநாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் தலைமை வகிப்பர். இக் கூட்ட முடிவில் இரு தலைவர்களும் இணைந்து பத்திரிகையாளர் மாநாடொன்றிலும் கலந்து கொள்வர். மேற்படி கூட்டத்தில் எடுத்த முடிவுகளை இம் மாநாட்டில் இவர்கள் வெளியிடுவர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளுமுன்னர் இரண்டுநாள் விஜயம் ஒன்றை மேற கொண்டு அடுத் செவ்வாய்அன்று இங்கு வரவுள்ள ஜஸ்வந்சிங்காவுடன் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார்.பிரதமர் ரணில் எதிர்வரும் ஒக்டோபர் 20-ந் திகதி தனது இந்திய விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். அங்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கலந்துரையாடியபின் சமாதானம் தொடர்பாக முக்கிய அறிவித்தல் ஒன்றை இந்திய அரசாங்கம் விடுக்கவுள்ளது. (ந-106)

## ஐரோ. ஆணையாளர் இலங்கை வருவார்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு ஆணையாளர் கிறிஸ் பற்றேன் இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இம்மாத முடிவில் இலங்கை வரவுள்ளார். இவ் விஜயத்தின் போது அவர் பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.அத்துடன் அவர் வடக்கிற்கும் விஜயம் செய்யவுள்ளார் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் எஸ்.வில்சன் அறிவித்துள்ளார். வடக்குக்கு விஜயம் செய்யும் அவர் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற புனர்நிர்மாணப் பணிகளையும் பார்வையிடவுள்ளார். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பெருமளவு நிதியுதவியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-106)


## மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு அனைத்துப் புடவை வகைகளும்
10.10.2003 தொடக்கம் 24.10.2003 வரை
விசேட மலிவு விலையில்
விற்பனையாகிறது
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்
258, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP
குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் சிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி
### கனகரத்தினம் பரமானந்தம் R.M.P- LMPH

திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் 64,அரசவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி கனகரத்தினம் பரமானந்தம் 11.10.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நா.கனகரத்தினம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், புஷ்பவதி (லண்டன்), சற்குணம், பரிமளநாயகி, துரைராஜா(லண்டன்), டாக்டர் நாகராசா(லண்டன்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பொ.குமாரசாமி, பொ.நடராசா, பரமேஸ்வரி மற்றும் கனகரத்தினம் பத்மினி ஆகியோரின் மைத்துனரும், சந்தானலட்சுமி(லண்டன்), கமலாதேவி, ஜெகநாதன்(ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), சந்திரா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், க.கனகசபை (ஓய்வு பெற்ற நிலஅளவையாளர்) அ.சிவநாதன்(சிறிஸ்கந்தா அரிசி ஆலை வவுனியா), காந்திமதி, இரத்தினசிங்கம் (நிர்வாக உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை) ஆகியோரின் மாமனாரும், கேசவன்(U.K) ஸ்ரீராம்(U.K), அருண்மொழி (ஹற்றன் நஷனல் வங்கி), அரவிந்தன் (செலான் வங்கி) அம்பிகை (சேவாலங்கா) ஆரூரன்(U.K), ஆர்த்திகா, அகிலன் (M.L.T-மந்திகை), மதன் (யாழ். பல்கலைக் கழகம்) செந்தூரன், திவ்யா, ஆகியோரின் பேரனும், கங்கேஷ்வர்,ஹம்சத்துவனி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

64, அரச வீதி,
நல்லூர்.

ப.ஜெகநாதன்
(மகன்)

(C/6741)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.